கண் வைத்திய
நிபுணர்களினால்
சிபார்சு செய்யும் கண்ணாடி
களைச் சரியாகக்
கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

S.M.Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED
580. HOSPITAL ROAD,
NEAR BANK OF CEYLON
JAFFNA.

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ வைகாசி மீ 17 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்தா பிறை 6 (31-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 100

வடபகுதி பொலிஸ் நிலையங்களை செயற்படச் செய்ய முயற்சி

# மாகாண பொலிஸுக்கு நூறு பேரை அவசரமாகப் பயிற்றுவிக்க ஏற்பாடு

## புலிகளின் பட்டியலிலிருந்து தெரிவு; யாழ்ப்பாணம் கோட்டையில் பயிற்சி

யாழ்ப்பாணம், மே. 31

வடபகுதி பொலிஸ் நிலையங்களை இயங்கச்செய்யும் நோக்குடன் வடக்கு - கிழக்கு மாகாணப் பொலிஸுக்கு அவசர அவசரமாக நூறுபேரை பயிற்றுவித்துச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

விடுதலைப்புலிகள் கொடுத்த பெயர்ப்பட்டியலில் இருந்தே நூறுபேருக்கு முதற்கட்டமாக பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான பயிற்சிகள் யாழ்ப்பாணம் கோட்டையில் யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி. ஜே. ஜெயராஜன் கண்காணிப்பில் நடைபெறும்.

வடபகுதியில் பொலீஸார் இயங்குவதை விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என கடந்த திங்களன்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் - அமைச்சர் ஹமீத் சந்திப்பின்போது பாதுகாப்புப் படையினரால் விசனம் தெரிவிக்கப்பட்டதும்-

மாகாணப் பொலீஸ் இயங்கும்வரை பொலீஸார் மீதான கட்டுப்பாடுகள் இருப்பதைத் தவிர்க்க முடியாது என விடுதலைப் புலிகள் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

அதனையடுத்தே அவசர அவசரமாக மாகாணப் பொலீஸுக்கு ஆட்களை தெரிந்தெடுத்து, பயிற்சியளித்து, நியமிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

வடபகுதியில் மாகாணப் பொலீஸாரை நியமிப்பதன் மூலம் வடபகுதி பொலீஸ்

(5ஆம் பக்கம் பார்க்க)

## தேயிலை விலை வீழ்ச்சி

கொழும்பு, மே 31

தேயிலை விலை என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற தேயிலை ஏலவிற்பனையில் தேயிலை விலைகள் வீழ்ச்சியடைந்திருந்ததைக் காணமுடிந்தது.

ரஷ்யாவுக்கு பெருமளவில் ஏற்றுமதியாகும் தேயிலை ரகத்தின் விலை 15 ரூபா வீழ்ச்சிகண்டது.

மற்றைய ரகங்களைச் சேர்ந்த தேயிலையும், பெரிதும் விலை வீழ்ச்சி கண்டன. (அ-3)

கூட்டுத்தாபனத்தில் ஊழல்:

## மாலைதீவு மந்திரி நாட்டை விட்டு ஓட்டம்!

மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் இல்யாஸ் அப்துல் இப்ராஹீம் கொழும்பு வழியாக பெயர் குறிப்பிடப்படாத இடம் ஒன்றுக்கு தப்பிச் சென்றுவிட்டார் என்று கூறப்படுகின்றது.

இந்த அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாலைதீவு அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தில் பெரிய அளவில் ஊழல்கள் இடம்பெற்ற செய்தி வெளியானதைத்தொடர்ந்தே பாதுகாப்பு அமைச்சர் மாலைதீவை விட்டு வெளியேறினார் என்றும் கூறப்படுகிறது.

மாலைதீவில் சதிப்புரட்சி முயற்சி ஏற்படக்கூடிய நிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுவதைக் கொழும்பிலுள்ள மாலைதீவு தூதரக பொறுப்பதிகாரி மறுத்தார்.

பாதுகாப்பு அமைச்சர் இப்ராஹீம் மாலைதீவில் இல்லை என்று மாலைதீவு ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தினார். (ஒ-எ)

## விடுதலைப் புலிகள் வழங்கும் வாகன அனுமதிச் சான்றிதழ் பெறுவதற்கான காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 31

யாழ். மாவட்டத்திலுள்ள நான்கு சக்கர வாகனங்களுக்கான அனுமதிச் சான்றிதழ் வழங்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களைப் பரிசோதித்து அவ் வாகனங்கள் வீதிகளில் செலுத்தக்கூடிய தகுதியான நிலையில் உள்ளனவா என்பதை இந்தச் சான்றிதழ் உறுதி செய்யும்.

இந்தச் சான்றிதழ்களை விடுதலைப் புலிகள் வழங்கவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஜூன் முதலாம் திகதிக்கு (நாளைக்கு) முன்னர் இந்தச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள்ஏற்கனவே அறிவித்திருந்தனர். இப்பொழுது பத்திரம் பெறுவதற்கான திகதி ஜூலை முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அரச அதிபர் மாநாடு

அரசாங்க அதிபர்களுக்கான மாநாடு இன்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறுகிறது.

## மன்னார் ஒளி பெற்றது; நேற்று முதல் நீர்மின்சாரம்

யாழ்ப்பாணம், மே 31

மன்னார் பகுதிக்கு நேற்று முதல் நீர்மின்சாரம் கிடைத்தது.

இதுவரை ''ஜெனரேட்டர்கள்'' மூலமே மன்னாருக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வந்தது.

மன்னாருக்கான நீர் மின் விநியோக இணைப்பு நேற்று பூர்த்தியாக்கப்பட்டதை அடுத்து மன்னாருக்கு தொடர்ந்து 24 மணி நேரமும் கட்டுப்பாடற்ற அளவில் மின்சாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது

இதுவரை காலமும் மன்னாருக்கும் தலைமன்னாருக்கும் இடையில் உள்ள ''சன்னி'' கிராமம் என்ற இடத்தில் உள்ள ஜெனரேட்டர்களையும், மன்னார் நகரசபையின் ஜெனரேட்டர்களையும், கொண்டே மன்னார் பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது அனுராதபுரம் களத்தாவையிலிருந்து வவுனியாவுக்குச் செல்லும் பாரிய

(5ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு சம்பந்தமான முடிவுகள் இன்று தெரியவரும்

வடக்கு - கிழக்கு நிலைமைகள் குறித்து முக்கிய முடிவுகள் இன்று வெளியிடப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன

நேற்றிரவு ஆரம்பித்த அமைச்சரவைக் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்பு;தேர்தல்; அரசமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குதல்உட்படப் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

அமைச்சரவை நேற்று மாலை கூடியது. இரவு நெடுநேரமாக பல விடயங்கள் ஆராயப்பட்டன. அவற்றில் வடக்கு - கிழக்கு விவகாரங்களும் அடங்கியிருந்ததாகச் சொல்லப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட விவரங்கள் இன்று காலை அமைச்சரவைப் பேச்சாளரால் நடத்தப்படும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்படும். (அ-3)

## வடக்கு-கிழக்கில் இப்போது புலிகள் இயக்கத்தினர் மட்டுமே

'ஏசியாவீக்' சஞ்சிகைக்கு அமைச்சர் ரஞ்சன் பேட்டி

யாழ்ப்பாணம், மே 31

வடக்கு-கிழக்கில்இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே உள்ளனர் என்று பாதுகாப்புத்துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா ''ஏசியா வீக்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 25 ஆம் திகதி யிடப்பட்ட ''ஏசியா வீக்'' சஞ்சிகையில் வெளியான அமைச்சரின் பேட்டியின் முக்கிய பகுதி வருமாறு:-

கேள்வி: இலங்கையில் இரண்டு அரசுகள் -ஒன்று கொழும்பில் மற்றது புலிகளால் நடத்தப்படுவதாக பலர் கூறுகிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பதில்: இரண்டு அரசாங்கங்கள் இயங்கவில்லை. ஜனநாயக நடைமுறைக்குவருவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னைத் தயார் செய்து வருகிறது· அவ்வளவு தான்.

வடக்கு - கிழக்கில் தமிழ் தேசிய இராணுவம் அல்லது அதன் எஞ்சியுள்ளோரின் தாக்குதல்குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் எச்சரிக்கையாக உள்ளது.

மொத்தமாகப் பார்பின் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே உள்ளது.

அவர்களின் மீட்பு, இலங்கை அரசுடன் பேரம் பேசுவதில் உள்ளது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



உந்த பயிலுநர் ஆசிரியர் சமாச்சாரம் ஆரம்பத்தில் இருந்தே ஒரே குளறுபடி எண்டு சொல்லுங்கோ பின்னை...!

வன்செயலில் உயிரிழந்தோரின் உறவினர்களுக்கு உதவ

## மேலதிகமாக பயிலுநர் ஆசிரியரை நியமிக்க அனுமதி கேட்கிறார் சுந்தர்

யாழ்ப்பாணம், மே. 31

''வன்செயலில் உயிரிழந்தோரின் இரத்த உறவினர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் தெரிவில் முன்னுரிமை அளிக்கும் திட்டத்தை யாழ் மாவட்டத்திலும் செயற்படுத்துவதற்கு வசதியாக —

இந்த அடிப்படையில் இனி மேல் தெரிவு செய்யப் படுவோரை யாழ்ப்பாணத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக மேலதிகமாக நியமிப்பதற்கு அனுமதி தாருங்கள்''.

— இவ்வாறு வடபிரதேச கல்விப்பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கம் கல்வி, உயர் கல்வி அமைச்சை வற்புறுத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் நலனுக்கென இத்தாலி 10 கோடி ரூபா நிதியுதவி

நேற்று உடன்பாடு கொழும்பில் கைச்சாத்து

கொழும்பு, மே.31

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கானதிட்டங்களுக்கு இத்தாலி அரசாங்கம் 10கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இதுசம்பந்தமான உடன்பாடு ஒன்று கொழும்பில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது·

இத்தாலி அரசின் சார்பில் கொழும்பில் உள்ள இத்தாலித்தூதர் திரு. சினோ மகாலியும் இலங்கை அரசின் சார்பில் நிதிஅமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

வடக்கு கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும், சொந்த இடங்களுக்குத் திரும்பும் அகதிகளுக்கும் சுகாதார சேவைப் பணிகளுக்கு என்று 8கோடி 40 லட்சம் ரூபாவை வழங்க இத்தாலி அரசு முன்வந்துள்ளது.

அவசர உணவுப் பொருள் உதவிக்கென 1 கோடி 20 லட்சம்ரூபாவை வழங்குகிறது.

சுகாதாரம், போஷாக்கு உணவு ஆகியவற்றுக்கும் அக

(5ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

31-5-90
வியாழக்கிழமை வைகாசி 17
சுபநேரம்!
07.22 - 08.52
இராகுகாலம்
01·22 - 02.52

கோண்டாவிலில்

## எரிந்த மின்மாற்றிக்குப் பதிலாக ரூ. $2\frac{1}{2}$ லட்சம் செலவில் புதியது!

யாழ்ப்பாணம், மே 31

கோண்டாவில் குமரிக் கோட்டத்தில் மின்மாற்றி எரிந்த சம்பவம் ஒன்று கடந்த வாரம் இடம் பெற்றது.

இலங்கை மின்சார சபையினர் திருத்த வேலைகளை மேற்கொண்டு ரூ. 2 லட்சத்து 65 ஆயிரம் செலவில் புதிய மின்மாற்றி ஒன்றைப் பொருத்தி உள்ளனர்.

மின்மாற்றி எரிந்து போவதற்கு இரு காரணங்கள் இருப்பதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒன்று சட்ட விரோத மின்பாவனை. மற்றது மின்மார்க்கத் தடைகள் அகற்றப்படாமல் விடப்படுவது. பொது மக்களின் ஒத்துழைப்பு இன்றி இவற்றை நிவர்த்தி செய்ய முடியாது என்று அந்த அதிகாரி மேலும் சொன்னார். (இ)

## தோட்டத்தில் வேலை நிறுத்தம்

கொழும்பு, மே 31

வட்டவளைத் தோட்டத்தில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றையடுத்து தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். வட்டவளை லொறக் தோட்டத்தைச் சேர்ந்த இரு ஊழியர்களும் மற்றுமொருவரும் லொறியில் பசளை, தேயிலை ஆகியவற்றைக் கடத்தியதைக் கண்டு பிடித்த தோட்டத் தொழிலாளர்கள் பொலீஸாரி

[5ஆம் பக்கம் பார்க்க]

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு: குளறுபடிக்கு காரணம் என்ன?

யாழ்ப்பாணம், மே 31

வன்செயலில் உயிர் இழந்தவர்களின் இரத்த உறவினர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் முன்னுரிமை வழங்கும் திட்டம் யாழ். மாவட்டத்தில் மட்டும் செயற்படுத்தப்படாமல் இருப்பதுகுறித்து மேலதிக விபரங்கள் உதயனுக்குக் கிடைத்திருக்கின்றன.

மேற்படி முன்னுரிமை வழங்கும் திட்டம் குறித்து அமைச்சரவை மேற்கொண்ட முடிவு கடந்த 06-03-90 திகதியிடப்பட்ட சி. உ / செ. (வி) குறியிட்ட கல்வி செயலாளரின் சுற்றுநிருபத்தின்மூலம் சகல மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கும், மேலதிக கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## படகுகளுக்கு தகைமை பத்திரம் நாளை ஆவணம் பரிசீலனை

வேலணை உ. அதிபர் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், மே 31

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவ காலத்தில் சேவையிலீடுபடும் படகுகளுக்கு ''தகைமைப் பத்திரம்'' வழங்கப்பட இருக்கிறது.

படகுச் சொந்தக்காரர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வேலணை உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு சகல ஆவணங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட மீன்பிடித்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

17-15 வயதுக்கு உட்பட்டோருக்கான இரிக்கெட்

# பாடசாலை அணிகள் மோதல்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயதுக்கு உட்பட்ட 15 வயதுக்குட்பட்ட பாடசாலைகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஜூன் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கசெயலாளர்கப்டன் என். சோமசுந்தரம் செய்துள்ளார்.

இப்போட்டிகளுக்கு யாழ்ப்பாணம்கிரிக்கெ - மத்தியஸ்தர்கள்சங்கத்தினைச் சேர்ந்த மத்தியஸ்தர்கள் மத்தியஸ்தம் வகிப்பர்.

17 வயதுக்கு உட்பட்ட பத்து பாடசாலை அணிகளும் 15 வயதுக்கு உட்பட்ட ஏழு பாடசாலை அணிகளும் இப்போட்டிகளில் பங்கு பற்றுகின்றன.

## 17 வயதுப்பிரிவு

17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டிகள் ஜூன் 2 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

17 வயதுக்குட்பட்ட பத்து பாடசாலைகளின் அணிகள் இரு பிரிவுகளாக போட்டியில் ஈடுபடும். ''ஏ'' பிரிவில் யாழ். இந்துக்கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அணிகள் அடங்குகின்றன. ''பி'' பிரிவில் மகாஜனாக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி, கனகரத்தினம் ம. ம. வி., யாழ்ப்பாணக் கல்லூரிகளின் அணிகள் அடங்குகின்றன.

எதிர்வரும் 2 ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு எதிராக சென். பற்றிக்ஸ் கல்லூரியும், யாழ். இந்து கல்லூரிமைதானத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு எதிராக யாழ். இந்துக்கல்லூரியும், மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் யாழ். மத்தியகல்லூரிக்கு எதிராக மகாஜனாக்கல்லூரியும், கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு எதிராக கனகரத்தினம் ம. ம. வி. அணியும் மோதவிருக்கின்றன.

## 15 வயதுப்பிரிவு

15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையேயானகிரிக்கெட் போட்டிகள் ஜூன் 3 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

15 வயதுக்கு உட்பட்ட ஏழு பாடசாலைகளின் அணிகள் இரு பிரிவுகளாக போட்டிகளில் ஈடுபடவிருக்கின்றன. ''ஏ'', பிரிவில் யாழ். மத்தியகல்லூரி, மகாஜனாக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரிகளைச் சேர்ந்த நான்கு அணிகளும். ''பி'' பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரிகளைச் சேர்ந்த மூன்று அணிகளும் அடங்குகின்றன.

ஜூன் 3 ஆம் திகதி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் மகாஜனாக்கல்லூரிக்கு எதிராக யாழ். மத்திய கல்லூரி அணி மோத இருக்கிறது. (இ - மு)

# 50 ஓவர் இரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வடபகுதியிலுள்ள கழகங்கட்கிடையில் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

டொனால் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப் படவிருக்கும் இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு இன்று31 ஆம்திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் ''நொக் அவுட்'' முறையிலேயே நடைபெறவுள்ளன. (இ-மு)

# கடும்நடவடிக்கை

ஏழைகளுக்கான நிவாரண உதவிகளைச் சூறையாடும் அரசஊழியர், எந்தப் பதவியில் இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த எச்சரிக்கையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி நேற்று விடுத்தார்.

காலி நகரமண்டபத்தில் நேற்று நடந்த புனர்வாழ்வு சம்பந்தமான மாநாட்டில அமைச்சர் பேசும்போது இதனைத் தெரிவித்தார். [ஓ-எ]

# சிரமதானம்

நெடுங்கேணி மே 31

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் சிறுவர் பாடசாலை அம்பாள் ஆலயம், இறம்பைக்குளம் வீதி ஆகியன சிரமதான மூலம் துப்பரவு செய்யப்பட்டன.

பொதுப்பணிஊழியர் திரு. ச. நித்தியானந்தம் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ். சோமசுந்தரம் ஆகியோரின் தலைமையில் நூற்றுக்குமேற்பட்ட திராம மக்கள் இப்பணியில் கலந்து கொண்டனர். (ப-108)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 31

''சமூக அபிவிருத்தியில் மாற்றும் கருவிகளாகப் பெண்கள்'' என்ற பொருளில் [illegible] ளிர் அபிவிருத்தி நிலையம் வேலணை ஐயனார் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை கருத்தரங்கு ஒன்றை நடத்தும். (ப)

# பாடசாலை வைபவங்கள் நடத்தவும் இனி விதிகள்!

கொழும்பு மே 31

பாடசாலை வைபவங்கள் எப்படி நடத்தப்படவேண்டும்? இதனை விளக்கும் சுற்றுநிருபம் ஒன்று சகல பாடசாலைகளுக்கும் அமைச்சர் அத்துலத்துலத்முதலி அனுப்பிவைக்க இருக்கிறார்.

இதன்படி, பாடசாலை வைபவங்கள் ஒன்றரை மணித்தியாலங்களுக்குள் நிறைவு பெறவேண்டும்.

''பாண்ட்'' வாத்திய அணி நடையும் 40 மீற்றருக்கு அப்பால் நீடிக்கக்கூடாது.

- இப்படியான விதிகள் அச் சுற்றுநிருபத்தில் இடம் பெற உள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலை வைபவங்களில் நன்றியுரை கூறுவதும் கைவிடப்படவேண்டும் என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

# பாலுக்கு தட்டுப்பாடு

வல்வெட்டித்துறை மே 31

வடமராட்சியில் மீண்டும் பரவிவரும் கோமாரி நோயின் பீடிப்பால் கால் நடைகள் இறக்கின்றன. இதை அடுத்து இங்கு பசுப்பாலுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. (ப-160)

# பாடசாலை சபைகள் விரைவில் நிறுவப்படும்

கொழும்பு, மே 31

சகல பாடசாலைகளிலும் பாடசாலை சபைகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

பாடசாலை வளர்ச்சியில் அப்பகுதி மக்களை ஈடுபடுத்துவதே இச்சபைகள் அமைக்கப்படுவதன் நோக்கமாகும்.

இச்சபைகளில் ஆசிரியர்களும் இடம்பெறுவர்.

படிப்படியாக இப்பாடசாலை சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படும்.

இத்தகவலை கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பு, கல்கிசை மகளிர் பாடசாலை வைபத்தில் பேசுகையில் வெளியிட்டார். (அ-எ)

# ஷப்றா புதிர் போட்டி முடிவு

கடந்த 27-05-1990 அன்று நடைபெற்ற ஷப்றா கிரிக்கட் புதிரின் விடைகளும் பரிசு பெற்றோர் விவரமும் பின்வருமாறு:

1. இயன்போத்தம். 2. லோறன்ஸ்றோ. 3. டொன் பிரட்மன். 4 ஒன்று. 5 பிரண்டன் குறுப்பு. 6. அலன் போர்டர். 7. யாழ்ப்பாணம் கிரிக்செட் மத்தியஸ்தர் சங்கம். 8 B.R. சைன். 9. டென்டுல்கார். 10. டியூலிப் மெண்டிஸ்.

பரிசு பெற்றோர்:

1. S. சிவகரன், 209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
2. சு. விவேகரமணன், 134, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
3. கா. காசி, 219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
4. S. புவனேந்திரன். 165, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
5. ந. சுரேந்திரன், 134, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [சி/4616]

# இராமோதய சபை முறை; புத்துயிர் அளிக்க முயற்சி

கொழும்பு, மே. 31

கிராமோதயசபைமுறைக்கு புத்துயிர் கொடுக்க அமைச்சர் பெஸ்டஸ் பெரெரா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

கிராமசேவையாளர் பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒரு கிராமோதய சபை என்ற அடிப்படையில் சுமார் 15 ஆயிரம் கிராமோதய சபைகள் நிறுவப்படவுள்ளன.

தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் கிராமோதய சபைகளின் ஆயுள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி [நாளை] முதல் காலாவதியாகிவிட்டதாக கருதப்படும் என்று, அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார். (உ-எ)

# கொத்தணி அமைப்பின்நோக்கம் செயற்படுத்தப்பட வேண்டும்

## கல்வி அதிகாரி வலியுறுத்து

அச்சுவேலி, மே 31

''கொத்தணி அமைப்பில் மூலாதாரப் பாடசாலைகள் ஏனையவற்றை எவ்விதத்திலும் புறக்கணிக்காமல் அவற்றின் வளர்ச்சிக்கு முழுமையான ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்க வேண்டும். இந்நடைமுறை செயற்படாவிடின் இவ்வாறான அமைப்பின் நோக்கம் கேள்விக்குறியாகிவிடும்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அதிபர் திரு. ஏ. விக்கினேஸ்வரராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. என். கணேசபிள்ளை மேற்கண்டவாறு எடுத்துரைத்தார்.

அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது;

''கொத்தணிப் பாடசாலைகள் குடும்பம் போன்று செயற்பட்டு வளங்களைப் பயன்படுத்தி கல்விப் போதனையில் முன்னேற வேண்டும். மாணவர்கள் கல்விக்கு உரிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரும் ஆசிரியரும் கூட்டுப் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்'' — என்றார்.

போட்டிகளில் முதலாம் இடத்தை அப்பர் இல்லமும் 2 ஆம், 3 ஆம் இடங்களை முறையே சுந்தரர் சம்பந்தர் இல்லங்களும் பெற்றன. திருமதி ச. கணேசபிள்ளை வெற்றியீட்டியமாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். (ப-11)

# தண்டனை

கொழும்பு, மே 31

மாணவரைச் சேர்க்க பணம் அறவிடும் பாடசாலை அதிபர்கள் பதவிநீக்கம் செய்யப்படுவர் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி எச்சரித்திருக்கிறார்.

கல்வி அமைச்சில் நடந்த கல்விப்பணிப்பாளர்கள் மேலதிகக் கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் அமைச்சர் பேசினார்.

புதிய மாணவர்களைச் சேர்க்கும்போது பணம் அறவிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. (உ-எ)


# இலங்கைச் சுங்க அலுவலகம்

## யாழ்ப்பாண மாவட்டம்

## சுங்க விற்பனை 2/90

## பொருட்களுக்கான கூறு விலை கோரல்

விற்பனைக்கான கீழ்வரும் பட்டியல்களில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவகைப் பொருட்களுக்கான கிலோ ஒன்றின் அல்லது பொருள் ஒன்றின் விலைக்கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சுங்க விற்பனை 2/90 எனக்குறிப்பிடப்பட்டிருப்பின் 06 . 06 1990 அன்று புதன்கிழமை காலை 10.00 மணிவரை யாழ் மாவட்ட சுங்க அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் 06 . 06. 1990 புதன் கிழமை காலை 10 00 மணியளவில் வருகை தந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகள் பிரித்துப்பரிசீலிக்கப்படும். வருகை தரமுடியாத கேள்வினர் எழுத்து மூலம் தமது பிரதிநிதிகளை நியமிப்பின் எனது அனுமதியுடன் அவர்கள் அலுவலகத்தில் சமூகமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதியுயர்ந்த விலைக்கான கேள்வி ஏற்றுக்கொள்ளுமிடத்து கேள்விக்குரியவர் முழுப்பொருட்களுக்குமான மொத்த விலைத்தொகையை வங்கி உத்தரவாதவோலை (Bank Draft) மூலம் மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இதன்பின் தீர்மானிக்கப்பட்ட திகதியில் விற்பனைக்கான பொருட்கள் யாவும் காங்கேசன்துறை இறங்குதுறையிலிருந்து விநியோகிக்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானி இலக்கம் 291 (1984 . 03 . 30) இல் சுங்கப்பணிப்பாளர் நாயகம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

### பட்டியல்கள்

| | |
|---|---|
| தலைமயிர் சூடி வகைகள் (Clips) | — பட்டியல் ''அ'' |
| எவர்சில்வர் பொருட்கள் (Eversilverwares) | — பட்டியல் ''ஆ'' |
| சவர்க்கார வகைகள் | — பட்டியல் ''இ'' |
| வாசனைப் பொருட்கள், செப்புப் பொருட்கள் | — பட்டியல் ''ஈ'' |
| புடைவை வகைகள் | — பட்டியல் ''உ'' |
| வீடியோ மற்றும் மின்சார உபகரணங்கள் | — பட்டியல் ''ஊ'' |
| படகுகள்/ வள்ளங்கள் | — பட்டியல் ''எ'' |
| வெளியிணைப்பு மோட்டார் இயந்திரங்கள் | — பட்டியல் ''ஏ'' |

பட்டியல்களை ''அ'' இலிருந்து ''ஏ'' வரை யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் அல்லது காங்கேசன்துறை சுங்க அலுவலகத்தில் அல்லது காரைநகர்/ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் 05- 06 - 1990 பிற்பகல் 3. 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: இவை பற்றிய மேலதிக விபரங்களை யாழ் மாவட்ட சுங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


சுங்க அத்தியட்சகர்,
யாழ் மாவட்ட சுங்கப் பணிப்பாளருக்காக
/வேல்/

சுங்க அலுவலகம்,
601/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1990- 05- 29.

([illegible]/1550)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



## செல்வன் க. விஜயகுமார் (விஜயன்)

மண்ணில்: 01 - 06 - 1973 மனதில்: 01 - 05 - 1990

எங்கள்
கூட்டத்தில் இருந்து
உதிர்ந்து போன
நட்சத்திரமே!
நீ இல்லை
என்பது
உண்மை
அந்த நினைவு தான்
கசப்பானது!
நீ
எங்களோடு
வாழ வேண்டும் என்று
நாங்கள் நினைத்தபோது
உன்னால்
வாழ முடியாமல்
போனதும்
ஜீரணிக்க முடியாத
நிஜமாகி விட்டதே!

பிரிவால் துயருறும்,
பெற்றார், உற்றார், உறவினர்.

டச்சு றோட்,
சாவகச்சேரி.

[13306]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.

**பொருள்:**

காமம் அலரால் வெளிப்பட வெளிப்பட இனிய தாதல் கள்ளுண்பவர் கள்ளுண்டு மயங்க மயங்க அக் கள்ளுண்பதையே விரும்பினாற் போன்றது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 2288
31 - 05 - 1990   த. பெ இலக்கம் 25

# சமூக நிலை தாராளமாகட்டும்

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் மூன்று நாள் மாநாட்டின் முடிவில் அரசியல், சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மகளிர் முன்னணியினால் உடனடியாகச் செயற் படுத்தப்பட உள்ள வேலைத் திட்டங்களும் தயாரிக்கப் பட்டுள்ளன.

அரசியல் போராட்டத்தில் தமிழ்ப் பெண்களின் பங்கு, எந்த விதத்திலும் ஆண்களை விடக் குறைந்தது அல்ல என்று துணிந்து கூறும் அளவுக்கு உயர்ந்திருப்பது ருப்பது வெளிப்படை

தாயைப் போலப்பிள்ளை; நூலைப் போலச் சேலை என்று கூறுவர். தமிழ் இளைஞர்கள் தாயக மண் பற்றுடன் தமது மக்களின் விடிவுக்காக, சுதந்திரத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துப் போராடுகிறார்கள் என்றால் அந்த உணர்வும், உறுதியும் அவர்களின் அன்னையரிடம் இருந்து வந்தவையே. எனவே, ஈழத்துத் தமிழ்த் தாய்மார்கள் வீரப்புதல்வர்களை நாட்டுப் பற்றுள்ள பிரசைகளைப் பெற்றெடுத்த வீரத்தாய்மார்கள்.

அது மறைமுகமாக எழும் தரவு. தமிழ் இளம் நங்கைகள் தாமே சுதந்திரப் போராட்டத்தில், விடுதலைக் களத்தில் குதித்திருப்பது ஈழத் தமிழ்ப் பெண்களின் வீரத்தை நேரடியாக எடுத்துக் காட்டும் மாண்பு மிக்க செயலாகும்.

தங்கள் கற்பைக் காக்கவும், தமக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராகவும், நாட்டுக்கு எதிரான படை எடுப்பை முறியடிக்கவும் தனித்தும், ஒன்றித்தும் போராடிய வீரத்தமிழ் நங்கைகளை எமது சங்க இலக்கியங்கள் காட்டின.

அதன் பின்னர் இப்போது, ஈழத் தமிழ் மண்ணில் தான், அடக்கு முறைக்கு எதிராகக் களம் புகுந்திருக்கும் வீரத்தமிழ் மகளிரை நேரில் காண்கிறோம். இது ஒரு வரலாற்றுப் பதிவு என்பதில் உலகின் நான்கு திசைகளிலும் வாழும் தமிழ் மக்கள் பெருமைப்படுகிறார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் தம் பங்களிப்பைச் சரிவர நல்கி வரும் தமிழ் நங்கை நல்லாள்கள் அரசியல் சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாக இயற்றியுள்ள தீர்மானங்கள் ஒன்பதும் யதார்த்தமானவை: இறுக்கமானவை; கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை; கருத்தில் பதிக்கப்பட வேண்டியவை.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் படவேண்டும் என்பது தொடக்கமான, மாகாணசபை உடனடியாகக் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்த வேண்டும்; ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டும் என்பது வரையிலான அரசியல் பிரச்சினை சம்பந்தமான ஐந்து தீர்மானங்களும் காலத்தின் தேவைகள்.

தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை அவை துலாம்பரமாக எடுத்தியம்பி நிற்கின்றன. அவை ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கிய போதிலும், ஈழத் தமிழ் மகளிரின் அரசியல் நிலைப்பாடு பிரதான நிலைப்பாட்டில் இருந்து வேறுபட்டதல்ல என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. அந்தத் தீர்மானங்கள் செயல் வடிவமாக வேண்டும் என்பதற்காக தமிழ்ப்பெண்களும் செயற்படுவார்கள், போராடுவார்கள் என்பதை அவை சொல்கின்றன.

சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாக நிறைவேற்றப் பட்டுள்ள நான்கு தீர்மானங்களும், "ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லைக் காண்" என்று பல வருடங்களுக்கு முன் பாரதி பாடிய நிலை இங்கு — ஈழத்தில் — இன்னும் வரவில்லை என்பதை எடுத்துரைக்கின்றன.

அதனால், "விடுதலைக்கு மகளிரெல்லோரும் வேட்கை கொண்டனம், வெல்லுவம் என்றே" என்ற மனநிலைக்கு ஈழப் பெண்கள் வந்துவிட்டார்கள் என்பதையும் பிரஸ்தாப தீர்மானங்கள் தாமாகவே சொல்கின்றன.

ஈழத் தமிழ்ப் பெண்கள் இன்னும் ஒடுக்கப்படுகிறார்கள்; பல துறைகளில் அவர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது; பல துறைகளில் சமத்துவம் இன்மை நிலவுகிறது என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

எல்லாத் துறைகளிலும் தமிழ்ப் பெண்கள் போட்டி போட்டு முன்னேறி வந்தாலும், அவர்களின் பல உரிமைகள் சமூகத்தினால் இன்னும் பேணப்படவில்லை என்பது உண்மையே. அவர்கள் அந்த உரிமைகளைப் போராடிப் பெற இடம் வைக்காமல் சமூக நிலை தாராளமாக்கப்பட வேண்டியது அவசியம். தமிழர்கள் தமது அரைப்பாகத்தினரின் உரிமைகளை வழங்காமல், தமக்கு உரிமைகேட்பது கேலிக்கூத்தானது என்று மற்றவர்கள் சொல்ல இடம் வைக்கக்கூடாது.

# சுவிஸ் நிறுவன பொறுப்பாளர் மன்னார் பகுதிக்கு விஜயம்

மன்னார், மே 31

சுவிட்சர்லாந்து உள்ளக ஒத்துழைப்புத் தாபனத்தின் இலங்கைப் பொறுப்பாளர் செல்வி. டொறதி. ஜொகாறன் வன்னிப்பிரதேச கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் அழைப்பின் பேரில் அண்மையில் மன்னார் பிரதேசத்துக்கு விஜயம் செய்தார். அவருடன் இலங்கை மூலவள ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திருமதி. பிரியந்தி பெர்ணான்டோ, திரு. நந்தசேன மகதொட ஆகியோரும் சென்றிருந்தனர்.

மன்னார் பெரியமடுவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் மேற்படி கிராம அபிவிருத்தி நிறுவனத்தால், வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பொருளாதார, சமூகவியல் நடவடிக்கைகளை இவர்கள் பார்வையிட்டனர்.

மேற்படி விஜயத்தின் போது மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிக் குழுக்களுடன் செல்வி டொறதி கலந்துரையாடினார். (இ-7)

## மீண்டும் இயங்கும்!

சுன்னாகம் தச்சு வேலைப் பயிற்சிக் சலாசாலையை மீண்டும் இயங்கச் செய்ய யாழ்-சிறுகைத்தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏராளமான தச்சு வேலைப் பயிற்சியாளர்களை உருவாக்கிய இந்த நிலையம் சடந்த கால வன்செயல்களை அடுத்து செயல் இழந்திருந்தது.

## சமய நிகழ்வுகளில்

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 31

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி புதன் கிழமை கும்பாபிஷேகம் நடைபெறும். அடுத்த நாள் மண்டலாபிஷேகமும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி சங்காபிஷேகமும் நடத்தப்படும். (ப-118)

### திருவிழா

அச்சுவேலி, மே 31

அச்சுவேலி நாவற்காடு காட்டுமலைக் கந்தசாமி கோயில் திருவிழா கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

26 தினங்கள் நடைபெறவுள்ள இவ்விழாவில் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்தம் என்பனவும் 23 ஆம்திகதி திருக்கல்யாணமும் இடம் பெறும். (ப-11)

### வருடாந்த மகோற்சவம்

மயிலணி, மே 31

சுன்னாகம் - மயிலணி திருக்குடவயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஜூன் மாதம் 4 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 6 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் மாலை 5.30 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை சமயசொற்பொழிவுகள் நடைபெறும். (இ-89)

# மூதூரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்படும் அபாயம்

## வாய்க்கால்களில் நீர்பாய உதவுமாறு வடக்கு-கிழக்கு ஆளுனரிடம் கோரிக்கை

திருகோணமலை மே 31

மூதூர்ப் பகுதி நீர்ப்பாசன வாய்க்கால்களில் இம் முறை போதியளவு நீரில்லாததால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யமுடியாத அபாய நிலை தோன்றியுள்ளது. தோப்பூர், நிலாப்பளை கங்குவேலி, மணற்சேனை போன்ற கிராமங்கள் இதனாற் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

வாய்க்கால்களில் நீர்பாய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி மூதூர் விவசாய அபிவிருத்திச் சம்மேளனம் வடக்கு — கிழக்கு (ஆளுநர்), விவசாய அமைச்சின் செயலாளர், நீர்ப்பாசனத்துறை அதிகாரி, ஆகியோருக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-150)

## வவுனியா நகரப் பகுதியில்

# காணி அற்றோருக்கு காணி

வவுனியா, மே 31

வவுனியா நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் காணி அற்றவர்களுக்கு காணி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வவுனியா கச்சேரியைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

குடியிருப்பதற்கென ஒருவருக்கு 20 பேச் வரையிலான காணி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது.

இதற்குரிய விண்ணப்பங்கள், விபரங்கள் என்பன உரிய அதிகாரிகளின் ஊடாக விரைவில் கோரப்படவுள்ளன எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (இ-164)

## வவுனியா ஆஸ்பத்திரி இரத்த வங்கி;

# அடிக்கடி ஏற்படும் மின்தடையால் இரத்தம் பழுதடையும் ஆபத்து

வவுனியா ஆதார வைத்தியசாலையில், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியுடன் 2 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரத்த வங்கியின் கூரை அமைப்பு, வயரிங் வேலைகள் என்பன சீரில்லாத காரணத்தினால் டாக்டர், தாதிகள் மற்றும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அடிக்கடி ஏற்படும் மின் தடை காரணமாக, சேமித்து வைக்கப்பட்டுள்ள இரத்தம் பழுதடைந்து வீணாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கூரை வேலைகள் சீரில்லாத காரணத்தினால் மழை நேரத்தில் அறைகளில் ஒழுக்கு ஏற்படுவதாகவும், வயரிங் கோளாறு காரணமாக அடிக்கடி பியூஸ் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் மின்தடை காரணமாக குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் நான்கு பைந்து இரத்தம் பழுதடைந்து வீணாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ 164)

### அனலைதீவு இறங்குதுறை பாலம்

நெடுந்தீவு, மே 31

அனலைதீவு இறங்குதுறை பாலம் உடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் படகுக்குச் செல்லும் பொதுமக்களும் படகில் இருந்து இறங்கிவருவோரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. (இ-111)

# பருத்தித்துறை நகரை மறுசீரமைப்பதற்கு குழு

பருத்தித்துறை மே 31

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் சீரழிந்த பருத்தித்துறை நகரை மறுசீரமைக்கும் நோக்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி குழு ஒன்றை நியமித்துள்ளது.

இம்மறுசீரமைப்புக் குழுவுடன் ஆலோசனை செய்த பின்னரே சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென முன்னணியின் வடமராட்சிஅரசியல் பொறுப்பாளா அறிவுறுத்தியுள்ளார். (ப-118)

## வடமராட்சியில்

# ரூ. $2\frac{1}{2}$ லட்சம் செலவில் வீதிகள் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், மே 31

பெருந்தெருக்கள் திணைக்களம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் வடமாராட்சியில் பல வீதிகளை திருத்தி அமைக்க உள்ளது.

1989 ஆம் ஆண்டுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிமூலமே வீதிகள் திருத்தப்பட உள்ளன.

உடுப்பிட்டி, மாலிசந்தி, அல்வாய் வரையான வீதிகள் 145 ஆயிரம் ரூபா செலவிலும், —

இராச கிராமம் ஊடாக செல்லும் சரவெட்டி வீதி 76 ஆயிரம்ரூபாசெலவிலும், —

வரணி - மீசாலை வீதி 37 ஆயிரம் ரூபா செலவிலும் — திருத்தியமைக்கப்பட உள்ளன.

அதேவேளை வடமராட்சிக்கு வெளியே திருநெல்வேலி - கோப்பாய் வீதி 119 ஆயிரம் ரூபா செலவிலும், —

நீர்வேலி - புன்னாலை கட்டுவன் வீதி 107 ஆயிரம் ரூபா செலவிலும், நவாலி புதிய வீதி 350 ஆயிரம் ரூபா செலவிலும், நீர்வேலி - ஊரெழு வீதி 177 ஆயிரம் ரூபா செலவிலும் திருத்தப்படும்.

அத்துடன் சில்லாலை உள்வீதி 33 ஆயிரம் ரூபா செலவிலும், கொழும்புத்துறை பீச வீதி 26 ஆயிரம் ரூபா செலவிலும் திருத்தப்பட்டு வருகின்றன. (இ-9)

# திருமலை, மட்டக்களப்புக்கும் றன்பேர்லி நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் மே 31

லண்டனிலுள்ள றன்பேர்லி நூல் நிலையத்தினர் பாடசாலை, பொது நூல் நிலையங்களுக்கு விநியோகிப்பதற்காக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 3 ஆயிரம் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இந் நூல்களின் ஒரு பகுதி திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ். பற்றீசியன் இன்ஸ்ரிரியூற், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, மட்டக்களப்பு பெரியகல்லாறு மகா வித்தியாலயம், சுன்னாகம் பொது நூல் நிலையம் ஆகியவற்றிற்கு தலா 200 நூல்களும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திற்கு 150 நூல்களும், கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயத்திற்கு 100 நூல்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

1500 நூல்கள் திருமலை மட்டக்களப்பு மாவட்ட கல்லூரிகளுக்கு விநியோகிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் மீண்டும் ஒரு தொகுதிநூல்களை றன்பேர்லி நூல் நிலையத்தினர் அனுப்பவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### முட்கம்பி அன்பளிப்பு

பச்சிலைப்பள்ளி மே 31

பளை அரசினர் வைத்தியசாலையின் வேலிகளை திருத்துவதற்கென இரண்டு அந்தர் முட்கம்பியை பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க முட்கம்பியை கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.பீ. ஜோர்ஜ், வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகை பாகனிடம் கையளித்தார். (இ-117

### நெடுங்கேணியில் இணக்க மன்றுகள்

நெடுங்கேணி மே 31

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிநெடுங்கேணி கிராம சேவையாளர் பிரிவுகளில் இணக்கமன்றுகளைஅமைத்து வருகிறது.

நெடுங்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர் பாலன், மருதோடை அரசியற் பொறுப்பாளர் வினோ என்போரது தலைமையில் இம் மன்றுகள் ஒவ்வொன்றுக்கும் எழுவர் கொண்ட நிர்வாகக் குழுக்களும் நியமிக்கப்படுகின்றன.

அத்துடன் இவர்களுக்கு குழுவின் செயற்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படுகிறது'

பொது மக்களது முறைப்பாடுகள் நாளை தொடக்கம் விசாரணை செய்யப்படவுள்ளன. (இ-108)

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்

# வயது எல்லை தொடர்பாக மாணவரிடையே குழப்பம்

தாளையடி மே 31

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் விண்ணப்பம் தொடர்பாக, கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில், விண்ணப்பிக்கும் மாணவர்களின் வயது எல்லை தொடர்பாக குழப்பம் நிலவுகிறது.

கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு இப் பரீட்சை சம்பந்தமாக அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில், 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பத்து வயதிற்கு மேற்பட்டவராகவும், 11 வயதிற்கு உட்பட்டவராகவும், பரீட்சார்த்திகள் இருக்க வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 1986 ஆம் ஆண்டு ஐந்து வயது பூர்த்தியடைந்து பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மாணவர்கள், தற்போது ஐந்தாம் ஆண்டில் 9 வயதிற்கு மேற்பட்டவர்களாகவே இருக்க முடியும்.

இது சம்பந்தமாக பாடசாலை அதிபர்கள் விசாரித்ததை அடுத்து விண்ணப்பதாரர்கள் 9 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், 10 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டுமென கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-144)

## நாணய மாற்று விகிதம்

29-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 230.35 | 231.31 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.40 | 4002.60 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண் | 6765.40 | 6805.99 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2376.75 | 2407.13 |
| 100 | பிரெஞ்சுப் பிராங்க் | 701.45 | 717.55 |
| 100 | ஜப்பானிய யென் | 26.5918 | 26.9344 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறேசர் கல் இல்லாததால் வேலைகள் பெருமளவு தாமதம்

யாழ். நகரின் புனரமைப்பு புனர்நிர்மாண, வேலைகள் தாமதமடைவதற்கு முக்கிய காரணம் கிறேசர் கல்லு கிடையாதது ஆகும்.

தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 20 ஆயிரம் கியூப் கற்களும் பெருந்தெருக்கள் திணைக்களத்துக்கு 1000 கியூப் கற்களும் உடனடியாகத்தேவைப்படுகின்றன.

ஆனால் வல்லை, உரும்பிராய் ஆகிய பகுதிகள் உட்பட யாழ். மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 100 கியூப் வரையான கல்லே உற்பத்தி செய்யப்படுகிறது. (இ-9)

## பொதுசன திருமுகம்

### மீளக்குடியமர்த நிவாரணம் இல்லையா?

'நிவாரணம் வழங்க மே... 3 கோடி ரூபா வந்து ... தது' என்ற செய்தி ... யன்' பத்திரிகையில் ... யாகி இருந்தது. இப்படிய... பல செய்திகள் உதயன் ... திரிகைகயிலும் வேறு ப... கைகளிலும் பல தடவை... வெளி வந்துள்ளன.

ஆனால் எம்மைப் போ... மிகவும் மோசமாக பா... கப்பட்டவர்களுக்கு ... வரை மீளக்குடியமர... நிவாரணப்பணமான இ... டாயிரம் ரூபா கூட ... வரை வழங்கப்படவில்ல... கிராம சேவகர்களிடம் ... டால் 'ஒதுக்கிய பணம் ... ந்துவிட்டது. மீண்டும் ப... ஒதுக்கியதும் அடுத்த ப... யலில் உங்களுக்கு வழங்... படும்' எனக் கூறுகின்றன...

ஆனால் அதன் பின்... யாழ். கச்சேரிக்கு நிவார... வழங்கவென பல தடவை... மேலதிமாக நிதி வந்து சே... துள்ளதாக செய்திகள் வ... விட்டன.

எனினும் நல்லூர் உத... அரச அதிபர் பிரிவில் ... நூற்றுக்கணக்கான குடும்... களுக்கு இன்னும் மீளக்... யமர்தல் நிவாரணம் வழ... கப்படாதது கவலைக்குரிய...

எனவே இது விடயம... யாழ். அரச அதிபரே... ஏனைய உயரதிகாரிகளே... கவனம் செலுத்தி எம... குறையைத் தீர்ப்பார்களா?

வே. சிவலிங்கம்
திருநெல்வேலி.

### சமாதான நீதிவான் இல்லை

ஒட்டுசுட்டான் கிராமத்தி... சென சமாதான நீதிவா... எவரும் இல்லை. இன்றை... சூழ்நிலையில் சமாதான நீ... வான் ஒருவரின் சேவை மி... வும் அத்தியாவசியமாக உ... ளது. இதனால் இக் கிராம... மக்கள் சத்தியக் கடதா... போன்ற விடயங்களுக்கா... பலமைல்களுக்கு அப்பா... உள்ளகிராமங்களுக்குச்செல்... வேண்டிய அவல நிலை ஏ... பட்டுள்ளது.

அங்கே சென்றாலும் குறிப்பிட்ட சமாதான நீதிவான்கள் தமக்கு இவர்களைத் தெரியாது எனச் சொல்லி விடுகிறார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் இக் கிராம மக்களின் கஷ்ட நிலையை உணர்ந்து நடவடிக்கை எடுப்பார்களா?

க. சோதி
ஒட்டுசுட்டான்.

### ஆய்வு நடத்த நெடுந்தீவு விஜயம்

நெடுந்தீவு மே 31

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் துறையைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் அடங்கிய குழு ஒன்று தீவுப்பகுதி பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு நெடுந்தீவுக்கும் வருகைதந்தது.

நெடுந்தீவின் சரித்திர மற்றும் பண்பாட்டு நிலைகள் குறித்தும் அவர்கள் ஆராய்ந்தனர் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. ஞா. செபஸ்தியாம்பிள்ளையின் நெறிப்படுத்தலில் இந்த ஆய்வுகள் மேற் கொள்ளப் படுகின்றன என்று தெரிகின்றது. (இ - 111)

### சைவசமய பாட பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை 1989 இல் நடத்திய இலங்கை சைவசமய பாடப் பரீட்சை முடிவுகள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (இ-74)

# ...னஞ் சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

...da CD 50 கோல்ட் ...சாளி 50 புதிய ...ல்கள் தொடர்பு ...தர்சன் (சின்னத்துரை ...) இல: 9/6 மலர்மகள் ...அரியாலை மாம்பழம் ...அருகில் யாழ்ப்பாணம். (13309)

...da. Chaly. CD 50' ...) CD 90. (Benly) ...டார் சைக்கிள்கள் ...டன் விற்பனைக்கு ... தொடர்பு: K. K. ... வட்டாக்கை கந்த ... சுன்னாகம். (13308)

... வண்ணங்களில் வளர்ப்பு ...ள் விற்பனைக்கு உண்டு. ...ன்லி அக்குரியம், 37/6, ...ன்லி வீதி, யாழ்ப் ...ம். (மஸ்கன் கட்டிட ...ல்) (3725)

## ...ளவு விற்பனைக்கு

...ளிப்பாய் முதலியார் ...சபை வீதியில் செல்ல ... விளையாட்டு மைதா ...ற்கு அண்மையில் நல்ல ...டலில் நல்ல தண்ணீர் ...ற்றுடனும், நல்ல நிலை ...ள்ள வீட்டுடனும் பிர ...சனங்களுடனும் 8 பரப்பு ...ரி விற்பனைக்குண்டு. ...டர்பு இல: 2, ஐந்தாம் ...கை, பிறவுண் வீதி, ...ப்பாணம். சந்திக்கும் ...ம் மாலை 5 மணிக்குப் (3727)

## தேவை

விற்பனையாளராகப் பணிபுரிய படித்த பையன்கள் தேவை. யாழ் மாநகரசபைக்கு அண்மையில் உள்ளவர்கள் மட்டும் நற்சான்றுப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3728)

30-40 வயதிற்கிடைப்பட்ட ஆண் காசாளர் இருவரும் 25-35 வயதுகிடைப்பட்ட ஆண்/பெண் காசாளர் இருவரும் அனுபவம் வாய்ந்த சமையல்காரர் மூவரும் பரிமாறுவோர் மூவரும் தேவை பழக விரும்புவோரும் தேவை தொடர்பு: கிறில் சைனீஸ் இன், 181, பலாலிறோட், கோண்டாவில். (3770)

புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் வில்லிசைக் குழுவொன்றிற்கு, நகைச்சுவையாகப் பேசக்கூடிய பக்கப் பாட்டுக் கலைஞர் தேவை தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும் முகவரி:- V K. தேவகாந்தன், 11ஆம் வட்டாரம், புங்குடுதீவு (3729)

## உடன் தேவை

பயன்படுத்தக் கூடிய ஆர்மோனியம் உடன் தேவை. தொடர்பு கொள்க ப. இராமலிங்கக்குருக்கள், செங்குந்தா லேன், திருநெல்வேலிகிழக்கு. யாழ்ப்பாணம். (3731)

## Spoken Advanced Toefl

மாசிமாதம் (Feb 90) ஆரம்பித்துப் பின் இடை நிறுத்தம் செய்யப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்க. நேரம் காலை 8 – 10 மணி வரை மாலை 4 – 6 மணி வரை S B Iyar, 12(36), வைமன் வீதி, நல்லூர். (13163)

## புலமைப் பரிசில் பரீட்சை 1990

ஆண்டு- 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பி-ப 3.00-6 00 வரை நடைபெறுகிறது வெளிமாணவர்களும் தோற்றலாம். விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணார் பண்ணை தபால் நிலையம் முன்பாக) 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (13170)

## வீடு வாடகைக்கு

சகல வசதி கொண்ட வீடு வளாகச் சுற்றாடலில் வாடகைக்கு விடப்படும் முழு விபரங்களையும் தெரிவிக்கவும். இல. 707, C/o உதயன். [3726]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## விஞ்ஞானபீட கல்வியாண்டு 1989 / 90

இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட விஞ்ஞானபீட மாணவர்களுக்கான 1989 / 90ஆம் கல்வியாண்டு 25-06-90ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம். (சி-4652)

# வருங்காலச் சிறுவர் உலகுக்கு நல்ல கொள்கை- எண்ணவித்து

## இன்பக் கனிகள் நூல் வெளியீட்டில் உரை

வவுனியா மே 31

''கவிஞரும் கல்விமானுமாகிய அருளானந்தம் அவர்களின் இன்பக்கனிகள் நூல் வெறும் சிறுவர் பாடல்களைக் கொண்ட நல்ல எமது வருங்கலாசமுதாயத்தினரான சிறுவர்களுக்கு நல்ல கொள்கைகளையும் நலஎண்ண வித்துக்களையும் ஊட்டுவதாக அமைந்துள்ளது.''

வவுனியா கல்வி அதிகாரியும் கவிஞருமான ச. அருளானந்தத்தின் இன்பக்கனிகள் நூல் வெளியீட்டு விழாவில் மதிப்புரையாற்றிய சைவப் புலவர் செ. குணபாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மண்டபத்தில் செட்டிகுளம் கொத்தணி அதிபர் திரு க. பேரம்பலம் தலைமையில் விழா நடைபெற்றது.

சைவப் புலவர் குணபாலசிங்கம் மேலும் தெரிவித்தாவது.

அன்புள்ளவனே உயிருள்ள மனிதன் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும் இதனையே வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார்கள். இந்த அன்பின் தத்துவத்தை முதன்மையாகக் கொண்டு அகரவரிசையில் நன்னெறிகளை வலியுறுத்தி இப்பாடல்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

சைவசித்தாந்தம் தொடக்கம் ஏனையமதங்கள் அனைத்தும் காட்டுகின்ற அன்பு நெறியை பிஞ்சுஉள்ளங்களில் பதிய வைக்கும் வகையில் முயன்றுள்ளார்.

சுகாதாரம் தலைமைத்துவம் மற்றும் தோகைமயில் வண்ணத்துப்பூச்சி, பாம்பு, எறும்பு போன்ற உயிரினங்களைக் கொண்டு இயற்கையோடு ஒட்டிய அழநணர்ச்சி வாழ்க்கை கோட்பாடுகள் கொள்கைகள் பற்றியும்எடுத்துரைத்துள்ளார்.

நல்ல கொள்கைகளும் நற்பண்புகளும் குழந்தைகள் உள்ளங்களில் நிறைந்து சமுதாயம் நிறைவடையும் வகையிலான நெறியைக் காட்டும் வகையில் அழகுற நூலை அமைத்துள்ளார்.

இப்படி அவர் கூறினார்.

இன்பக்கனிகள் நூலை வைபவரீதியாகயாக வெளியிட்டு வைத்துஉரையாற்றிய வவுனியா கல்விப்பணிப்பாளர் திரு. எஸ் நவரட்ணராஜா உரையாற்றுகையில்,

''கல்வி அதிகாரியானதிரு. அருளானந்தம் ஒரு நல்ல கவிஞன் இம் மாவட்டத்தின் கல்வித்துறையின் மேம்பாட்டில் அக்கறையும் ஆர்வமும் மிக்கவர் நல்ல எதிர்கால முடைய இவர் சிறந்த வழிகாட்டியாகக் திகழ்ந்து இம் மாவட்டத்தில் ஆயிரம் கவிஞர்களை உருவாக்க வேண்டும். அவரது பணி சிறக்க வேண்டும்'' என்றார்.

செல்வி க நிறைமதி, மகளிர் மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபர் மேரி அந்தேனியா பேக்மன், இளைப்பாறிய அதிபர் திரு. பொ. கனரத்தினம், உதவி கல்விப் பணிப்பாளர் திரு வீ கே. நாகராஜா, திரு. எ வில்லியம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

நூலாசிரியர் திரு. ச அருளானந்தம் பேசுகையில்,

இன்றைய மாணவர்கள் மத்தியில் தமிழின் தராதர நிலை கிழடைந்து வருகின்றது ழகர, லகர, ளகரபேதங்கள் அறியதாவர்களாகவும் கட்டுரைகள் எழுதும் போது அதன் வடிவங்களைத் தெரியாதவர்களாகவும்இருப்பதை அவர்களது பரீட்சைவிடைத்தாள்களின் மூலம் அறிய முடிகிறது.

இந்தநிலை மாறவேண்டும். ஆடல் பாடல்களின் மூலம் இசைப்பாடல்களின் ஊடாக சிறுவர்களுக்கு நல்ல மொழியறிவையும் நற் பண்புகளையும் போதிக்க வேண்டும். என்றார்.

இந்நூலில் உள்ள பாடல்கள் சிலவற்றுக்கு இவ்வைபவத்தில் இசையோடு கூடிய அபிநயமும் பிடித்துக் காட்டுடப்பட்டது. (இ-164)

# மேலும் 2 பாடசாலைகளை அமைச்சு பொறுப்பேற்கும்

மாங்குளம் மே 31

முல்லைத்தீவில் மேலும் இரு பாடசாலைகள் கல்வி அமைச்சினால் பாரமெடுக்கப்பட உள்ளன. முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட உடுப்புக்குள கிராமத்திலும்' புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இருட்டு மடுக்குளத்திலும் உள்ள பாடசாலைகளே பாரமெடுக்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் எஸ் மனோகரன் தெரிவித்தார்.

(இ-94)

# மாணவர் உடல் வளர்ச்சிக்கு விளையாட்டு அவசியமானது

மாங்குளம் மே 31

மாணவர்களின் உடல் வளர்ச்சிக்கு விளையாட்டு அவசியம் உடல் வளர்ச்சி ஏற்பட்டால் தான் உள வளர்ச்சி ஏற்படும். ஆகவே பாடசாலைகளில் விளையாட்டுப் போன்ற புறக்கிரித்திய வேலைகளுக்கு உரிய இடம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

யோகபுரத்தில் நடைபெற்ற கொத்தணி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், பாடசாலையை விட்டவுடன் தினமும் பல்வித விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுவதை இலகுபடுத்துவதற்கு அமைவாகவே இரு நேரப் பாடசாலை திட்டம் இம் மாவட்டத்தில் தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களின் நலம் கருதி இவற்றிக்கும் தங்கள் பங்களிப்பை ஆற்றவேண்டும் என்றார்.

விளையாட்டுப் போட்டிக்கு யோகபுரம் கொத்தணி அதிபர் தலைமை வகித்தார். கல்விப் பணிப்பாளருடன் விளையாட்டுக் கல்வி அதிகாரி ஜனாப் அகமட்கான் கலந்து கொண்டார்.

(இ 94)

## தசாகாதி கிரிகஞ்ஞயக் கிரிகை அழைப்பிதழும் நன்றி நவிலலும்

மேற்படி தலைப்பில் நேற்றைய உதயன்இரண்டாம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் —

இரண்டாவது பந்தியின் ஏழாம், எட்டாம் ஒன்பதாம் வரிகளை —

அன்னாரின தசாகாதி கிரிகஞ்ஞயக் கிரிகைகளில் கலந்து அவரின் ஆன்ம வீடு பேற்று நிலையடையப் பிரார்த்திக்குமாறு —

என்று திருத்தி வாசிக்கவும்.

# அரையாண்டு நினைவஞ்சலி



## திரு. சி. சோமசுந்தரம்

மண்ணுலகில்:- 03 – 08 – 1937
விண்ணுலகில் 30 – 11 – 1989

எமது மண்ணில் ஓர் முதியவராய் தொண்டுகள் பல புரிந்து நன்னெறிப் பாதையை காட்டியவராய் உத்தம புருஷனாக வாழ்ந்து விண்ணுக்கே அர்ப்பணித்த உத்தமர்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்;-
சண்டிலிப்பாய்
நண்பர்கள். (3680)

## ஓய்வு பெற்றார்

கொழும்புத்துறை, மே 31

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில்கடமை புரிந்த ஆசிரியை திருமதி அன்புகணேசதாசன் அண்மையில் ஓய்வு பெற்றார்,

தமது 35வருடகால சேவையில் இவர் காரைநகர் மெய்கண்டான் செங்கலடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, லுனுகலை தமிழ் மகாவித்தியாலயம், பசறை மகாவித்தியாலயம், பதுளை மகளிர் கல்லூரி யாழ் புனித ஜேன் பொஸ்கோ வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியப் பணி புரிந்தார்

(இ-7)

வெளிவந்துவிட்டது வாங்கிவிட்டீர்களா?

# ஞானக்கதிர்

அன்பு-அறநெறி – ஆன்மீகம்

[வைகாசி மாத இதழ்]

சாயிபாபா சொன்ன கதை
யானையை அடக்கிய சாது
அமெரிக்காவில் ஒரு சிவாலயம்
பிராரத்துவ வினை......
(புராணக் கதை)
திருவடி வணக்கம்
வேதாந்த மரபு......
(சமயத் தொடர் கட்டுரை)
நாளை முதல் குடிக்கமாட்டேன்......
(சமூகச் சிறுகதை)
திருமந்திரம்
நாமார்க்கும் குடியல்லோம்

ஈழத்துத் திருத்தலங்களான;
- சீரணி நாகம்மை
- புங்குடுதீவு கண்ணகியம்மன்
- வண்ணை நாச்சிமார் கோயில்

அற்புதங்களுடன், வரலாறுகளும்......

- கலாநிதி சபா. ஜெயராசா
- ஆத்மஜோதி நா. முத்தையா
- கலாநிதி சுப்பிரமணியம்
- அழகு அருணாசலம்
- கலாநிதி வித்துவான் க. ந. வேலன்
- வில்வம் பசுபதி

ஆகியோரின் ஆக்கங்களுடன்
இன்னும் பல அம்சங்கள்.........

விலை ரூபா 7/- மட்டுமே!

— பிரதிகளுக்கு உங்கள் பகுதி உதயன் முகவர்களை நாடுங்கள் —

[சி-4531]

# தவறிவிட்டது

28 05 – 1990 அன்று கீரிமலை பருத்தித்துறை வீதியில் த. கந்தவனம், கட்டடப்பகுதி கல்விப்பகுதி யாழ்ப்பாணம் என்னும் விலாசமிடப்பட்ட கந்தோர் பை (கறுப்பு) தவறிவிட்டது. அதனைக் கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்

த. கந்தவனம்
கட்டடப் பிரிவு,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

அல்லது

த. கந்தவனம்,
கலைவாணி வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை
(13307)

# பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

உதயன் பத்திரிகையில் 11 - 05 - 90 இல் வெளியான மேற்படி பதவிக்கான விளம்பரத்தில்,

வேதனம்: 1305 — 2370 / 60 x 04 — 75 x 11 என்பதற்குப் பதிலாக

ரூபா 1755 — 2805 / 75 x 6 — 100 x 6 எனக் தவறுதலாகக் குறிப்பிட்டிருந்தோம்...

விண்ணப்ப முடிவுத் திகதி:
19 – 06 - 1990 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

...சேவையிலுள்ள,
பொது முகாமையாளர்

[சி-4617]

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் வைகாசித் திங்கள் 20 ஆம் நாள் (03 - 06 - 1990) ஞாயிற்றுக்கிழமை காலை 8 57 தொடக்கம் 10 53 வரையுள்ள கடகலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எனது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிறீகந்தநாயகம்**
(மக்கள்வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சந்திரலதா**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் மாங்கல்ய தாரணம் செய்யப்பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 04 - 06 - 90 திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திருமதி நா. கனகசபாபதி,
அம்பலவாணர் வீதி,
சட்டுவன், தெல்லிப்பழை

திரு. திருமதி சிவசுப்பிரமணியம்,
இந்துக் கல்லூரி வீதி,
உரும்பராய் வடக்கு, உரும்பராய்
[3671]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## நாகலிங்கம் அரிஹரன்

தோற்றம்; 08 – 05 – 1969
மறைவு: 17 – 05 – 1986

திதி: 31 - 05 - 1990

சின்ன வயதில்
தேசத்தைக் காக்கின்ற
உன்னதத்தில்
நீ நடந்தாய்!
ஓ! எம் அரிஹரனே!
ஓர் நாள் உனைச் சூழ்ந்த
அந்நியரை எதிர்த்தே அவ்
உன்னதமே ஆனாயே!
ஓ! எம் இனியவனே!
என்ன, நாம் அந்நியரா?
எமையேன் மறந்தனையோ?

தந்தை, தாய், தங்கை,
உறவினர், நண்பர்கள்.

11ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (13305)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கனடாவுக்கு ஆட்களை அனுப்புவதில் பெரும் மோசடி கண்டுபிடிக்கப்பட்டது

## ஒருவர் கைது; மற்றொரு யாழ்வாசி தலைமறைவு

கொழும்பு, மே 31

கனடாவில் அரசியல் தஞ்சம் கோருவதற்கு ஆட்களைப் போலிக்கடவுச்சீட்டு மூலம் அனுப்பும் சர்வதேச மோசடி ஒன்றை இரகசியப் பொலிஸார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

கனடாவில் இருப்பவர்களின் கடவுச்சீட்டுகளைத் திரும்பப் பெற்று, அவற்றில் உள்ள படங்களை மாற்றி, வேறு படங்களை ஒட்டி ஆட்களைக் கனடாவுக்கு அனுப்பும் மோசடி பலமாதங்களாக இடம்பெற்றுவந்ததாகக் கூறப்படுகிறது.

இப்படி ஒருவரை அனுப்ப 3லட்சம் ரூபாவரை பணம் சேகரிக்கப்பட்டு வந்ததாம்.

இந்த மோசடியைக் கண்டுபிடிக்கச்சென்ற இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு ஒருவர் 20 ஆயிரம்ரூபா லஞ்சம் கொடுக்க முயற்சித்தார். அந்த நபர் கைதானதைத் தொடர்ந்துமோசடி அம்பலமானது.

அந்த நபர் தற்போது காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இம்மோசடியை நடத்தி வந்த இன்னொரு முக்கிய புள்ளி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தப்பி ஓடிவிட்டதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனையில் உள்ள வீடுஒன்றை முற்றுகையிட்ட இரகசியப் பொலிஸார் அங்கிருந்த நபரைக் கைது செய்தனர். அத்துடன் அவரிடமிருந்த 50 போலிக் கடவுச் சீட்டுகளையும் கைப்பற்றினர். [ஒ-எ]

## சிங்கப்பூர் கடையில் திருடிய எயர்லங்கா விமானி!

கொழும்பு, மே 31

சிங்கப்பூரில் கடை ஒன்றில் திருடிய எயர்லங்கா விமானி ஒருவர் பிடிபட்டார்.

இதனால் சிங்கப்பூரில் இருந்து கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்த எயர்லங்கா விமானம் 9 மணித்தியாலம் தாமதமாக வந்தது.

எயர்லங்காவில் சிரேஷ்ட விமானிகளில் ஒருவராக இவர் பணியாற்றி வருகிறார்.

கொழும்பில் இருந்து விமானி ஒருவரை சிங்கப்பூருக்கு அனுப்பியே அங்குஇருந்துஎயர்லங்கா விமானத்தை கொண்டு வர வேண்டியதாயிற்று.

அந்த விமானத்திலேயே, கடையில் திருடியதாகக் கூறப்படும் விமானியும் சாதாரண பயணியாகக் கொண்டு வரப்பட்டார். (ஒ-எ)

## மலையகத் தமிழருக்கு தனி மாகாணசபை வேண்டும்

### ம. ம.முன்னணி கோரிக்கை

கொழும்பு, மே 31

மலையகத் தமிழருக்கு தனி மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கொழும்பில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பி. சந்திரசேகரன் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

மலையகத் தமிழர் சார்பில் அரசுக்கு அனுப்பியுள்ள பத்துக் கோரிக்கைகள் பற்றிய விவரங்களை திரு சந்திரசேகரன் வெளியிட்டார்.

அவர் அப்போது சொன்னதாவது:-

★ மலையகத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் குடியேற்றங்கள் நடத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

★ காணியற்ற மலையகத் தமிழருக்கு அவர்கள் வசிக்கும் தோட்டங்களிலேயே காணிகள் வழங்கவேண்டும்.

இந்திய பாஸ்போர்ட் வைத்திருக்கும் மலையகத்தமிழரில் 98 சத வீதமானோர் இந்தியா திரும்பவில்லை.

நான்கு,ஐந்து தலைமுறையினராக வாழ்ந்து வரும்அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கு காரணம் எதுவுமில்லை,

★ மலையகத் தமிழருக்கு தனி மாகாணமும் தனி மாகாண சபையும் வழங்கப்படவேண்டும்- என்று திரு சந்திரசேகரன் சொன்னார். (ஒ-எ)

## ஆறாவது திருத்த நீக்கம்:

## எதிர்க்கட்சிகளுடன் பேச அரச தரப்பினர் முயற்சி!

கொழும்பு, மே 31

ஆறாவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை ரத்துச் செய்வது குறித்து எதிர்க் கட்சிகளுடன் பேச்சு நடத்த அரசு நடவடிக்கை எடுக்க இருப்பதாக அமைச்சர் சாகுல் ஹமீது சொன்னார்.

ரரய்ட்டர் செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில், ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்க் கட்சிகள் உத்தரவாதம்தருமானால் அப்பிரேரணையைக் கொண்டு வர அரசு தயாராக உள்ளது என்று அவர் சொன்னார். (உ-எ

### மன்னார் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின்விநியோக இணைப்பில் மதவாச்சியிலிருந்து புதிதாக தலைமன்னாருக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மதவாச்சிக்கும் மன்னாருக்கும் இடையில் தள்ளாடி பகுதியில் மன்னாருக்கான ஆரம்ப உப மின்நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

மன்னாருக்கான நீர் மின் விநியோக வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் மதவாச்சிக்கும் மன்னாருக்கும் இடையில் உள்ள மடுப்பகுதி உட்பட பல இடங்களுக்கு மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. (உ-3)

### இடம் பெயர்ந்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகள் மனநிலை, சமூகநிலை ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது என்பனவற்றுக்கும் குடியேற்றப்பகுதிகளில் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும், உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு தொழில் நுட்பம் மற்றும் உதவிகளை வழங்குவதற்கும் இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும்.

இத்தாலி அரசு மருந்து வகைகள், வாகனங்கள், உபகரணங்கள், முதலுதவிச் சிகிச்சைத் தொகுதிகள், சோதனைக் கருவிகள்,தையல் இயந்திரங்கள், சமையல்பாத்திரங்களையும் இத்திட்டத்தின்கீழ் வழங்க உள்ளது. (ஒ-எ)

## நோர்வே செஞ்சிலுவை ஏற்பாட்டில்

## வடமராட்சியில் 309 வீடுகளுடன் மாதிரிக் கிராமம் அமைப்பு

நோர்வோ செஞ்சிலுவைச் சங்கம் வடமராட்சியில் அமைக்க விருக்கும் வீடமைப்புத் திட்டத்தில் கூட்டுறவுக் கடை, உப- தபால் நிலையம், சுகாதார நிலையம் ஆகியனவும் இடம்பெறவிருக்கின்றன.

சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் வடமராட்சிப் பகுதியில் 309 வீடுகள் கொண்ட மாதிரிக் கிராமம் ஒன்றை அந்தச் சங்கம் அமைக்க விருப்பது தெரிந்ததே. இதற்கான ஆரம்ப வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் வந்துள்ள அந்தச்சங்கத்தின் பிரதிநிதி அரின் கிற யின் அப்பகுதிக்குச் சென்று வீடுகள் கட்டப்படவிருக்கும் பகுதிகளைப் பார்வையிட்டார்.

இந்த வீடமைப்புத் திட்டப் பகுதியில் குடியேறும் மக்கள் தம் தொழிலை தொடரும் வகையில் சுயதொழில் வாய்ப்பு வழிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன (உ-3)

## தாவீது அடிகளின் நினைவாக தும்பளையில் புதிய நூலகம்

### சனியன்று திறந்து வைக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 31

கலாநிதி தாவீது அடிகளின் ஒன்பதாம் ஆண்டு நினைவாக பருத்தித்துறை, தும்பளை புனித மரியாள் சனசமூக நிலையத்தினரால் அமைக்கப்பட்ட நூலகம் நாளை மறுதினம் சனிக்கிழமை அடிகளின் பெயரால இயங்கத்தொடங்கும்.

பருத்தித்துறை மறைப் பங்குத்தந்தை அருட்திரு ஆர். எம். ஜீ. நேசநாயகம் அடிகளார் அன்றுமாலை 6 மணிக்கு நூலகத்தைத் திறந்து வைப்பார்.

இந் நினைவு தினத்தன்று கலை நிகழ்ச்சிகளும், தாவீது அடிகளின் அரும் பணிகள் பற்றிய சிறப்புரைகளும் அடிகள் நினைவாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களின் சிற்றுரைகளும் இடம் பெறும். [ஒ-7]

## தமிழ்ப் பகுதிகளுக்கு ரூ. 2 கோடி

யாழ்ப்பாணம், மே 31

இலங்கைக்கு போரூட் அமைப்பு இவ்வருடம் ஒதுக்கி உள்ள 4 கோடி ரூபா உதவியில் தமிழ்ப் பகுதிக்கு 2கோடி ரூபா வழங்கப்படவிருக்கிறது.

போரூட் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி திரு. அரி எரிக்சன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்

கடந்த நான்கு வருடங்களாக இங்கு கடமையாற்றி நோர்வே திரும்பும் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது அமைப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ,வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு பல உதவிகளை வழங்கியுள்ளது.

சமூக அபிவிருத்தி , புனர்நிர்மாண வேலைகள் போன்ற திட்டங்கள்நாம்நடைமுறைப் படுத்தி வருகிறோம்.

86 ஆம் ஆண்டுமுதல் எமது அமைப்பு உதவிகளை வழங்கி வருகிறது. அப்போது 70 லட் ரூபா உதவியையே நாடு முழுவதும் போரூட் வழங்கியிருந்தது. ஆனால் இன்று 4கோடி ரூபா உதவியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த உதவியில் 2 கோடிரூபா தமிப் பகுதிக்கு வழங்கப்படுகிறது.

இப்படி அவர் கூறினார். (இ 3)

## வடக்கு கிழக்கில் - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:- ஈ பி. ஆர். எல் எவ். இயக்கம் இதற்குள் எப்படி அடங்குகிறது?

பதில்: மாகாணசபை அமைப்பது சம்பந்தமான இந்திய – இலங்கை உடன்பாட்டின் ஒரு பகுதியாக நாம் ஈ. பி. ஆர். எல். எவ். மாகாண சபைக்கு பாதுகாப்பு கொடுத்து வந்தோம்.

வடக்கு-கிழக்கில் அவர்களுக்குப் பொலீஸ் படை கொடுத்து வந்தோம்.ஆனால் முதல் அமைச்சர் என்ன செய்தார்? அவர் பொலீஸையும் இராணுவத்தையும் நம்பவில்லை. தமிழ் தேசிய இராணுவத்தை அமைத்தார் விடுதலைப் புலிகள் இதனை ஏற்கவில்லை.

சட்டவிரோத இராணுவத்தை வைத்திருக்கிறீர்களா? என்று நாம் முதலமைச்சரைக் கேட்டோம். முதலமைச்சர் மறுத்தார்.

### புலிகள் நிரூபித்தனர்

விடுதலைப்புலிகள் மட்டக்களப்பில் உள்ள தமிழ் தேசிய இராணுவ முகாம்கள் இரண்டைத் தாக்கி, ஆயுதங்களைக் கைப்பற்றி உலகுக்கும் அரசுக்கும், சட்டவிரோத இராணுவம் இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டினர்.

நாமும் தமிழ் தேசிய இராணுவ வீரர்களைப் பிடித்தோம். ஒரு கோடி ரூபா பெறுமதியான புத்தம் புதிய ஆயுதங்களை அவர்களிடம் இருந்து கைப்பற்றினோம்.

இந்திய உளவு ஸ்தாபனம் 'றோ' தமிழ்த் தேசிய இராணுவத்துடன் சேர்ந்து தங்களைப் பலவீனப்படுத்த முயலக் கூடும் என்பதற்காக விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை வைத்திருக்கிறது.

கேள்வி: அதை நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: ஓரளவு நம்புகிறேன். 'றோ' நன்மையானதல்ல. எமது உள்விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று 'றோ'வை எச்சரிக்கை செய்திருக்கிறேன். (அ-எ)

## மாகாண பொலீஸுக்கு - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களை இயங்கச் செய்யலாம் என அரசு எண்ணுவதாகத் தெரிகிறது.

கடந்த திங்களன்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் உயர்தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய அமைச்சர் ஹமீத் செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பில் பொலீஸ் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பிரதி பொலீஸ் மா அதிபர் ஏ. எஸ். சபூர், வடக்கு, கிழக்கு மாகாண பிரதி பொலீஸ் மா அதிபர் ஈ. ஆனந்தராஜா ஆகியோருடன் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த பட்டியலில் இருந்து நூறு பேரைத் தெரிவுசெய்து உடன் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பொலீஸ் அத்தியட்சகர் ஜெயராஜனுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இதன்படி-

விடுதலைப் புலிகள் கொடுத்த பெயர்ப் பட்டியலில், இதுவரை பொலீஸ் தேர்வுக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய நூறு பேர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

வவுனியாவிலிருந்து 93 பேரும் யாழ்ப்பாணத்திலிருந்து ஏழு பேரும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் யாழ்ப்பாணம் கோட்டையில் ஆரம்பமாகும்.

இதேவேளை-

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள பெயர்ப் பட்டியலில் உள்ள ஏனையோரை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### தோட்டத்தில் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டம் ஒப்படைத்தனர்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவிதத்தை அடுத்துதோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

### படகுகளுக்கு- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள பொறியியல் உதவியாளர் திரு எம். மகாதேவா ஆவணங்களைப் பரிசீலனை செய்து அறிக்கை தயாரிப்பார்.

அந்த அறிக்கை கொழும்பில் உள்ள கப்பல் வணிகப் பகுதிப்பொறியியலாளர் இல. அல்மெடாவுக்கு அனுப்பி வைக்கப்படும். (ஒ

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 10 00-12 00 | ரூ. 9.00-13 00 | ரூ. 16.00-18.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10 00 | ரூ. 7.00- 8.50 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 13.00-15.00 | ரூ. 10.00-14 00 | ரூ. 14.00-16.00 |
| பாகற்காய் | ரூ. 16.00-18 00 | ரூ. 10.00-13 00 | ரூ. 18.00-20.00 |
| கோவா | ரூ. 13.00-15.00 | ரூ. 12 00-14 00 | ரூ. 18 00-20.00 |
| லீக்ஸ் | ரூ. 19.00-21 00 | ரூ. 22 00-24.00 | ரூ 22 00-24 00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20 00 | ரூ. 23.00-24.00 | ரூ. 22 00-24 00 |
| பீற்றூட் | ரூ. 8.00-10 00 | ரூ. 7.00-12.00 | ரூ. 16.00-18.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 22 00-24.00 | ரூ. 22.00-24.00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 3 00- 5 50 | ரூ. 5 00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 18.00-20.00 | ரூ. 15.00-19 00 | ரூ. 20 00-22.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 40.00-42.00 | ரூ. 55.00-64.00 | ரூ. 30.00-32 00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 35.00-38 00 | ரூ. 40 00-50.00 | ரூ. 52.00-54 00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 30.00-32.00 | ரூ. 30.00-32 00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 10.00-12.00 | ரூ. 8 00-10 00 | ரூ. 10 00-12.00 |
| வெண்டைக்காய் | ரூ. 16.001-8.00 | ரூ. 16.00-18 00 | ரூ. 18.00-20.00 |

### முல்லைத்தீவு

## முஸ்லீம்கள் மீளக்குடியேற போரூட் ரூபா 1 கோடி உதவி

யாழ்ப்பாணம், மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து புத்தளத்துக்குச் சென்ற 981 முஸ்லீம் குடும்பங்கள் மீளக் குடியேற போரூட் அமைப்பு உதவி வழங்கி வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களால் 981 முஸ்லீம் குடும்பங்கள் புத்தளத்துக்கு இடம் பெயர்ந்திருந்தன.

அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களான கிட்சிராப்புரம், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி ஆகிய இடங்களில் வந்து குடியேற ஆரம்பித்துள்ளனர்.

போரூட் அமைப்பு அவர்கள் குடியேறுவதற்கான ஆரம்ப உதவிகளை வழங்கி வருகிறது.

இதற்காக ஒரு கோடி ரூபாவை அந்த அமைப்பு ஒதுக்கியுள்ளது. (இ-3)

## ஒப்பந்தகாரர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகார சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டம் ஒன்றுஎதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவிலுள்ள தலைமைக் காரியாலயத்தில்நடைபெறும். (ஒ)

### பட்டதாரிகள்

## 10 வருடம் சேவை புரிந்தால் நிர்வாக அதிகாரி பதவிகள்

திருகோணமலை, மே 31

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அரசுப் பணியில் பத்தாண்டு கால சேவையைப் பூர்த்திசெய்த சகல பட்டதாரி ஊழியர்களும் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படவிருக்கின்றனர்.

வடக்கு- கிழக்கு மாகாண உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

பல்வேறு திணைக்களங்களில் இந்த ஊழியர்களுக்குப் பதில் உதவிச் செயலாளர்கள் நிர்வாக உதவியாளர்கள் ஆகிய பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படி சகல திணைக்களங்களும் கோரப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி சொன்னார். [அ-எ]

### மேலதிக - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக் கேட்டிருக்கிறார்.

இந்தக் கோரிக்கையை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து அனுமதிபெற நடவடிக்கை எடுக்கப்படும் என அவருக்கு பதிலளிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை —

"வன்செயலில் உயிரிழந்தோரின் இரத்த உறவினர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் முன்னுரிமை வழங்கும் திட்டம் தமிழ் பகுதிகளுக்கு பொருந்தாது. சிங்களப்பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும் - என்று தமிழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்ததாக நேற்றைய உதயனில் வெளிவந்த தகவல் தவறானது என்று திரு. சுந்தரலிங்கம் உதயனுக்கு சுட்டிக் காட்டினார்.

எல்லா மாவட்டங்களுக்கும் பொதுவாகவே இந்தச் சுற்று நிருபம் வெளியிடப்பட்டதாக அவர் சொன்னார். [உ-9]

## அமைதி நிலை சீர்குலைந்தால் அரசே அதற்குப் பொறுப்பு

### பிரதித் தலைவர் கரிகாலன் தகவல்

மட்டக்களப்பு, மே 31

'வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அமைதியான சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பு இலங்கை அரசுக்குரியது. தற்போது உருவாகி வரும் அமைதியான சூழ்நிலை சீர்குலையுமானால் அதற்கு விடுதலைப் புலிகள் பொறுப்பு அல்லர்; இலங்கை அரசே முழுப் பொறுப்பும்' ஆகும்.

களுவாஞ்சிக்குடி வட்ட அவை, சிற்றார் அவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. எஸ். கரிகாலன் இவ்வாறு தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்தில் கூட்டம் நடைபெற்றது.

### பயிலுநர்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் 1990 03-12 ஆம் திகதியிடப்பட்ட க சே. கு/ஆ. தா/12/1101 இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் கல்விச்சேவைக்குழுவின் செயலாளர் அமைச்சரவைத் தீர்மானத்தில் - (வாரிசு முன்னுரிமை) என்று குறிப்பிடப்பட்ட சொற்றொடருக்கான விளக்கத்தைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்தச் சுற்று நிருபமும் சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், மேலதிக கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சுற்றுநிருபத்தில் வாரிசு முன்னுரிமை பெறத் தகுதியுடையோர் யார் என்பது விளக்கப்பட்டிருந்தது.

இந்தச் சுற்றுநிருபங்கள் எல்லாம் வெளியிடப்பட்ட பின்னர் 1990 மார்ச் 15 ஆம் திகதியளவில் யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் நியமனங்கள் இடம்பெற்றன.

இந்தச் சுற்று நிருபங்கள் யாழ்மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்துக் குறிப்பிட்ட வேளையில் கிடைத்தனவா என்றும்-

சுற்றுநிருபங்கள் கிடைத்திருந்தால் நியமனங்கள் செய்யும் போது, அவற்றை அதுதொடர்பான அதிகாரிகள் கவனத்தில் எடுக்கத் தவறியதேன் என்றும் இப்போது பெரும் கேள்விக்குறி எழுப்பப்படுகிறது. (அ-உ)


எமது இன்றைய

புதிய வெளியீடுகள்

[1] ✶ ரகுமான் ✶ ராதிகா ✶ நிழல்கள்ரவி

பட்டணந்தான் போகலாமடி

(ஒறிஜினல்)

[2] ✶முத்துராமன்✶ விஜயகுமாரி✶தங்கவேலு

★ மணியோசை ★

(ஒறிஜினல்)

[3] ★ ஜெய்சங்கர் ✶ விஜயகுமாரி✶ நாகேஸ்

★ காலம் வெல்லும் ★

(ஒறிஜினல்)

எமது வாடிக்கையாளரின் வசதியை முன்னிட்டு 1 - 06 - 90 முதல் இரவு 7. 00 மணிவரை எமது ஸ்தாபனம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

தனம் வீடியோ சென்ரர்.

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

[C/4654]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சகலவிதமான
★ ரெலிவிஷன்
★ வீடியோ டெக்
★ ரேடியோக்கள்
கைதேர்ந்த நிபுணர்களால்
திருத்திக் கொடுக்கப்படும்.

V. K. இராசரத்தினம்,
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4606)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[O/L வகுப்புக்கும், கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

O/L

DAY CLASSES பிரிவு 2
[8.30 — 1.30]
ஆரம்பம்: 06 - 06 - 1990
SAT, SUN பிரிவு 2
[8 00 — 2.00]
ஆரம்பம்: 02 - 06 - 1990

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின ரால் போதிக்கப்படும்.
★ கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
★ இலவசப் பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
[சி-4591]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**கோவிந்தபிள்ளை கனகராசா**
(குணம்)
திதி:-31 - 05 - 1990

ஆண்டு ஒன்று சழிந்தது அப்பா ஆறாத்துயரினிலே மாறாத நினைவுடனே மண்தலிலே வாழுகிறோம். இன்பமாய் வாழ்ந்த இல்லமும் இருளாகிவிட்டது பாசமாய் வளர்த்த எம்மை பரிதவிக்க விட்டு பரமனடி சென்றீரோ உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மகன்,
மகள், மருமகன்.

16/25 சிவன் கோவில் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(13271)

## நினைவு



**திருமதி. கனகேஸ்வரிசபாரத்தினம்**
இம்மை:-01-06-1926 மறுமை:-23-05-1988
திதி:- 31-05-1990

என்றும் எங்கள் நினைவில்
நிலைத்து விட்டாய் தாயே!

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரர், உற்றார், உறவினர்.

சித்தம்,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
(3536)

இன வன்செயல்கள் தொடருகின்றன

# பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடி

# பெனாசீரை பதவி விலக்க முஸ்தீபு!

## ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்

இஸ்லாமாபாத் மே 30

பிரதமர் பெனாசிர்பூட்டோவைப் பதவி நீக்கஞ் செய்யும்படி பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கானுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள சகல எதிர்க்கட்சிகளும் கூட்டாக இந்தவேண்டுகோளைவிடுத்துள்ளன.

பஞ்சாப் மாகாண முதலமைச்சர் ஷாநவாஸும் இந்த வேண்டுகோளை ஜனாதிபதிக்குவிடுத்தார்.

இதனிடையில் — கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஹைதரபாத் நகருக்கு இராணுத் தளபதி அஸ்லம் பெக் சென்றார்.

அவரை அங்கு பொதுமக்கள் அரசு எதிர்ப்பு இராணுவ ஆதரவுகோஷங்களை எழுப்பி வரவேற்றனர்.

இதேவேளை —

பாகிஸ்தானில் ஹைதரபாத் மற்றும் கராச்சி நகரில் வன்செயல்கள் அதிகரித்து வருவதால் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை இராணுவம் ஏற்றுள்ளது.

இதனிடையில் – இன வன்செயல்களில் இறந்தோர் எண்ணிக்கை 180 ஐத் தாண்டி விட்டது.

சிந்து மாகாணத்தில் உள்ள ஹைதரபாத் நகரில் கடந்த ஞாயிறு பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தோர் எண்ணிக்கை 100 ஐத் தாண்டி விட்டது.

கராச்சி நகரில் நேற்று மோட்டார் சைக்கிளில் திரிந்த இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்களில் இறந்தோர் எண்ணிக்கை 59 ஆக அதிகரித்தது.

துப்பாக்கி மனிதர் ஒருவர் ரயில் ஒன்றை நோக்கிச் சுட்டபோது ஒரு பயணி மரணமானார்.

இதனிடையில் பிரதமர் பெனாசிர் பூட்டோ நேற்று அவசரமாக சிந்து மாகாணத் தலைநகர் சென்று இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இதேவேளை –ஹைதரபாத் நகரில் கடந்த ஞாயிறு பொலிஸார் தாறுமாறாகச் சுட்டதை ஜனாதிபதி குலாம் இஷாக்கான் வன்மையாகக் கண்டித்தார்.

இது பற்றி நீதி விசாரணை ஒன்று நடத்தும்படி ஜனாதிபதி உத்தரவிட்டார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஸ்லம்பெக்குடனும் ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்தினார் (எ)

## கனடாவில் கோர்பச்சேவ்

ஒட்டாவா, மே 30

அமெரிக்கப் பயணத்தின் முதற்கட்டமாக சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்று கனடா போய்ச் சேர்ந்தார்.

அங்கு கனடாப்பிரதமர் மல்றோனியுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார். (எ)

## இந்திய செய்மதி

டெலிவிஷன் ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்புக்காக இன்சாட் – 14 என்ற செயற்கைக் கோளை இந்தியா தயாரித்துள்ளது.

இது ஜூன் 12 ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து விண்வெளிக்குச் செலுத்தப்படுகிறது. (எ)

## தென் துருவம்; உலக மாநாடு

ஒஸ்லோ மே 30

தென் துருவத்தின் எதிர்காலம் பற்றி உலக நாடுகளின் மாநாடு ஒன்று நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்தது. 24 நாடுகளைச் சேர்ந்த 150 நிபுணர்கள் கலந்து கொண்ட இம் மாநாடு மூன்று நாள் நீடித்தது. (எ)

## ஒப்படைப்பு

பன்முஞ்ஜொம், மே 30

கொரிய யுத்தத்தில் கொல்லப்பட்ட ஐந்து அமெரிக்கர்களின் அஸ்திகளை வடகொரிய அரசு அமெரிக்காவிடம் ஒப்படைத்தது.

வடகொரியாவில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அஸதிகளைப் பொறுப்பேற்றனர். (எ)

## 'கொலம்பியா' விண்பயணம் கடைசி நிமிடத்தில் ரத்து!

### தொழில் நுட்பக் கோளாறு காரணம்

வாஷிங்டன் மே 30

'கொலம்பியா' விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி வைப்பது கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

விண்கலத்தை எடுத்துச் செல்லவிருந்த ரொக்கெட்டில் கசிவு ஒன்று கடைசி நிமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

'கொலம்பியா' விண்கலத்தை மீண்டும் அனுப்பும் திகதி அறிவிக்கப்படவில்லை.

அமெரிக்க விண் வீரர்கள் இவ்விண்கலத்தில் சென்று நட்சத்திரங்களில் இருந்து வெளியேறும் வாயுக்கள் பற்றிய ஆராய்ச்சியை நடத்த விருந்தனர்.

அத்துடன் விண்வெளியில் வலம் வந்து கொண்டிருந்த விண்கப்பல் 'மிர்' இல் உள்ள ரஷ்ய வீரர்களுடன் இவர்கள் வானொலி மூலம் உரையாடல் நடத்தவும் இருந்தனர்.

## சிங்கர்

### விவசாய நீரிறைக்கும் இயந்திரம்
### சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்.ரோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
- எஸ். பி. 50 (மார்க் 2) விலை. ரூ: 15, 390/-
- என் எஸ். பி. 50 விலை: ரூ. 15,290/-

உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்



விவசாயப் பிரிவு
சிங்கர்*
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.

Minds/SA/8

மலேசியாவில் ஒரே நாளில்

## போதை வஸ்துக் கடத்தலுக்கு ஏழு பேர் தூக்கிலிடப்பட்டனர்

கோலாலம்பூர், மே 30

ஹெரோயின் போதை வஸ்தைக் கடத்திய குற்றத்திற்கு எட்டு ஹொங்கொங் பிரசைகள்மலேசியத் தலைநகர் கோலாம்பூரில்நேற்று முன் தூக்கிலிடப்பட்டார்.

அவர்களில் ஒருவர் பெண் ஆவார்.

அவர்களுக்கு கருணை காட்டும்படி உலகில் பல பகுதிகளில் இருந்தும் கிடைத்த கருணை மனுக்களை மலேசிய அரசு நிராகரித்ததைத்தொடர்ந்து எண்மரும் தூக்கிலிடப்பட்டனர்.

பிரிட்டிஷ் பிரதமர் மார் கரட்தாட்சரும் இவர்கள் சார்பில் கருணை மனு அனுப்பியிருந்தார்.

மரணதண்டனைக்குப்பதில் வேறு தண்டனை வழங்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபையும் மலேசிய அரசைக் கேட்டிருந்தது.

1982 ஆம் ஆண்டு நாட்டுக்கு 12 கிலோ ஹெரோயினைக் கடத்த முயற்சித்தபோது பெனாங்கு விமான நிலையத்தில் வைத்து இந்த எண்மரும் கைது செய்யப்பட்டனர்.

ஒரே சமயத்தில் எட்டுப் பேர் போதைவஸ்துக் கடத்தலுக்குத் தூக்கிலிடப்பட்டது மலேசியாவில் இதுவே முதல் தடவையாகும்.

போதை வஸ்துக் கடத்தல் குற்றத்துக்கு மரண தண்டனையைக் கட்டாயமாக்கும் சட்டம் மலேசியாவில் 1975 இல் இருந்து அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் பின்னர் இக் குற்றத்திற்காக இதுவரை 92 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

இவர்களில் 18 பேர் வெளிநாட்டுப்பிரசைகள் ஆவர். (எ)

ஆட்சிப் பொறுப்பைவிட

## தொண்டர்களின் இதய பதவியே பெரிது என்கிறார் கருணாநிதி

பட்டுக்கோட்டை மே 30

ஆட்சி சிம்மாசனத்தை விட தொண்டர்களின் இதய சிம்மாசனமே பெரிது.

முதலமைச்சர் கருணாநிதி முன்கண்டவாறு விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பதவி போகட்டும், பரவாயில்லை. பதவிவரும் போகும் ஆனால் தமிழ் உணர்வு ஒரு போதும் பறிபோகாமல் இருக்க வேண்டும்.

எனக்கு ஒரு தலைவர் இருந்து நான் மாற்றுக் கட்சியினரை புகழ்ந்தால் பதவி போனாலும் பரவாயில்லை என்றுதான் கருதுவேன்.

நான் பதவியை விட தமிழ் உணர்வைத்தான் பெரிதாக மதிக்கின்றேன். தொண்டர்களை மதிக்கின்றேன்.

ஒரு தொண்டனால்தான் இன்னொரு தொண்டனை உணரமுடியும். தொண்டராக இருந்துதான் இன்று இந்த நிலையில் இருக்கின்றேன்.

கொள்கையில் உறுதியாக நின்றதால் ஆட்சி பறி போனது. ஆட்சி சிம்மாசனத்தை விட லட்சோபலட்சம் தொண்டர்களின் இதய சிம்மாசனத்தை மதிக்கின்றேன்.

பணிந்து போகிறேன்என்று கூறி இருந்தால் ஆட்சி பறிபோய் இருக்காது.

பதின்மூன்று ஆண்டுகள் ஆட்சியில் இல்லாமல் இருந்து இருக்கலாம். ஆனால்தொண்டர்கள் இதயத்தில் தொடர்ந்து இருப்பவன் நான்.

கொண்ட கொள்கையை விடமாட்டேன் என்று உறுதியோடு நின்றேன். எங்கேயோ தூக்கி வீசி விட்டதாகக் கருதினார்கள்.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (எ)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் அ. வ. பாலசுப்பிரமணியம்**
**B. A. Trained Graduate L. T. (Scouts)**
(முன்னாள் தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்)

மலர்வு: 26 - 08 - 1929
உதிர்வு: 31 - 05 - 1984

திதி: 25 — 05 — 1990

''அப்பா அப்பா'' என
ஆசையுடன் அழைத்து - இன்று
ஆறாண்டுகள் மறைந்தனவே
அழுகின்றோம் நாமிங்கு
ஆண்டுகள்தான் ஆறாக ஓடி மறைந்திடினும்
அணையாத தீபமாக வீற்றுள்ளீர்கள் நம் மனதில்
அப்பாவின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
அன்புக் குடும்பத்தினர்.

அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.
[13272]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜ. தொ. கவின் தலைவர் தெரிவு 10ஆம் திகதி

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர் தெரிவு எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்று ஜ. தொ. காவின் நிர்வாக சபை கூடுகிறது. காலஞ்சென்ற ஜனாப். ஏ. அஸீஸின் இடத்துக்கு தற்சமயம் பொதுச் செயலாளராகவுள்ள திரு.வி.பி கணேசனும்—

பொதுச் செயலாளர் பதவிக்கு ஜனாப் அஸ்ரப் அஸீஸூம் தெரிவு செய்யப்படுவார்கள் என்று அறியவருகிறது. [உ-எ]

வடமராட்சியில்

## சுகாதார வசதியுடன் கூடிய வீடுகளை அமைக்க திட்டம்

யாழ்ப்பாணம், மே 31

வடமராட்சியில் செஞ்சிலுவைச் சங்கத்தால் அமைக்கப்படவிருக்கும் வீடுகளை சுகாதார வசதிகளுடன் விரைவில் அமைப்பது குறித்து நோர்வே செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் யாழ். மாவட்ட பொறியியலாளர்களுடன் ஆலோசனை நடாத்தி வருகிறார்கள்.

வடமராட்சிப் பகுதியில் ஸ்ரீ லங்கா இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்ட வீடுகளில் 309 வீடுகளை அமைத்துக்கொடுக்க நோர்வே செஞ்சிலுவைச்சங்கம் முன்வந்துள்ளது.

இங்கு இந்த வீடுகளை அமைக்க ஒரு வீட்டுக்கு 40 ஆயிரம் ரூபாவை செலவிட அந்த அமைப்பு முன்வந்தது.

ஆனால் சுகாதார வசதிகள் உள்ளதாக இந்த வீடுகளை அமைக்க இந்தப்பணம் போதாது என்று ஒப்பந்தக்காரர்கள் தெரிவிப்பதால் வேலைகள் ஆரம்பிப்பதில் தாமதமடைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவிடயம் தொடர்பாக ஆராய்வதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தின் புனர்நிர்மான வேலைகளுக்கு பொறுப்பான திரு. அரிக் கிறான்ஸ் தலைமையில் வந்துள்ள குழு பொறியியலாளர், ஒப்பந்தக்காரர் ஆகியோருடன் பேச்சு நடாத்தி வருகிறது. (இ-3)

# சமய வரலாறு ஆய்வு செய்யப்பட்டு நூல்கள் வெளிவர வேண்டும்

## வெளியீட்டு விழாவில் உரை

காங்கேசன்துறை மே 31

''காலத்துக்குக் காலம் எமது சைவ மதத்திற்கு ஆபத்து வந்த போதெல்லாம் நாயன்மார்களும், சைவப்பெரியார்களும் அதனை காத்து வளர்த்து வந்திருக்கிறார்கள். அது போன்று சைவ மதத்தை பேணிக்காக்க நாமும் எமது பங்களிப்பை செய்ய வேண்டும். எமது சமயவரலாறு ஒழுங்காக ஆய்வு செய்யப்பட்டு ஆதாரபூர்வமான நூல்கள் வெளிவரவேண்டும்''.

காங்கேசன்துறை கயாத்துறை ஆனந்தபிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற ஆலய வரலாறு குறித்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் இவ்வாறு கூறினார்.

ஆலய தர்மகர்த்தா திரு க. ஏரம்பமூர்த்தியால் தொகுத்து வெளியிடப்பட்ட இந்நூலின் வெளியீட்டு விழா சட்டத்தரணி மு. யோககுமார் தலைமையில் நடைபெற்றது.

சட்டத்தரணி திரு அ. குமரகுரு முதற்பிரதியை பெற்றார்.

கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் விழாவில் மேலும் பேசுகையில்,

இன்றும் எமது காலத்தில் மதமாற்றம் இடம்பெறுகிறது. வரலாறுகள் அழிக்கப்படுகின்றன. தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிராது இதற்கெதிராக குரல் எழுப்ப வேண்டும்'' என்றார்.

பண்டிதர் மா. குமாரசாமி பேசுகையில்;- சைவ மதத்தின் முதுகெலும்பாக இருப்பவை திருமுறைகள். அவற்றை சரியாகவும், கருத்துணர்ந்தும் ஓதி பயன் பெற வேண்டும்'' என்றார்.

பண்டிதை சிவபாக்கியம் பாலநாதன் பேசுகையில்:- இப்படியான வரலாற்று நூல்கள் வெளியாவது எமது சமுயத்திற்கு ஓர் அரணாக பாதுகாப்பாக விளங்கும். வரலாற்று நூல்கள் எமக்கு முக்கியமானவை. எமது வரலாற்றை சரியானபடி பேணிக்காக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்றார்.

ஆலய தர்மகர்த்தா குழு செயலாளர் திரு. செ. உலகப்பிரகாசம் நன்றி கூறினார். (இ - 68)

# கிளாலியில் சுகாதார நிலையம் அமைக்க காணி அன்பளிப்பு

## யாழ். மறை மாவட்டம் வழங்கியது

பச்சிலைப்பள்ளி மே 31

கிளாலியில் சுகாதார நிலையம் அமைக்க யாழ். மறை மாவட்ட ஆயர் அதி. வண வ. தியோகுப்பிள்ளை அரை ஏக்கர் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இப்பகுதி மக்களின் தேவை கருதி பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். கந்தசாமியினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது.

இந்த காணியில் சுகாதார நிலையம் அமைக்கும் பணி சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பகுதி மக்கள் தமது சுகாதார தேவைகளுக்காக பளை, எழுதுமட்டுவாள் ஆகிய பகுதிகளுக்கு சென்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

# கங்குவேலிக் கிராமம் பின் தள்ளப்பட்டது ஏன்?

## வாஞ்சிநாதன் கேட்கிறார்

திருகோணமலை, மே 31

'நான்குபக்கங்களில் கங்கை நதியும், நீரோடைகளும், பாய்ந்து கொண்டிருக்கும் இக்கங்குவேலிக் கிராமத்தில் 400 தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன. மிகவும் சிறிய எண்ணிக்கையாக இருந்தாலும்இம்மக்களின் வாழ்க்கைத் தரம், நீரோடைகளின் குளிர்மையைப் போன்று சிறப்பானதாக அமையவில்லையே அது ஏன்? என்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப்பார்க்கவேண்டும்'

மூதூர்ப்பிரதேசம், கங்குவேலியில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டத்தில்பேசும் போது முன்னணி உறுப்பினரும் கவிஞருமான மு. வேயோ. வாஞ்சிநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

'காலங்காலமாக இத் திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

குளக்கோட்டான் என்ற பழம்பெரும் அரசனால் கட்டுவிக்கப்பட்ட கந்தளாய்குளமும், தம்பலகாமம்கோணேஸ்வரகோயிலும் கங்குவேலி சிவன்கோயிலும்...... திருக்கோணமலையைப் பற்றி திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட திருகோணமலைப் பதிகமும், இராவணனால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் கன்னியா வெந்நீர்க் கிணறுகளும்.. இந்த மண்ணின் தமிழ்க் கலாசாரங்களாக நிற்பதை அறிந்திருந்தும் இந்த மண்ணைச் சிங்கள அரசு தன் சதி வலைக்குள் வீழ்த்தத் திட்டம் தீட்டியிருப்பதைநீங்கள் அறிந்திருப்பீர்கள் இச் சதிவலையை அறுத்து எமது பாரம்பரிய பூமியை மீட்பதற்காக நாம் அரசுடன் பேசுவோம்... முடியாவிட்டால்போராடுவோம்.

இப்படி அவர் கூறினார். (இ-ப)

### ஊக்குவிப்பு பணம் வழங்கப்படவில்லை

நெடுங்கேணி மே 31

நெடுங்கேணி வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கத் தலைமைப் பணிமனையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இதுவரை ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படாததால் ஊழியர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். இது சம்பந்தமாக கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. வி. குகராசாவிற்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (-108)

### பாலர் பாடசாலை

கைதடி மே 31

தச்சந்தோப்பு கிராமத்தில் பாலர் பாடசாலைக் கட்டடம் ஒன்று அமைப்பதக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான அடிக்கல் நடும் வைபவம் ஜூன் 4 ஆம் திகதி நடைபெறும். இது சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும்தச்சன் தோப்பு ஸ்ரீ முருகன் சனசமூகநிலைய நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர். [இ-74]

### டெலெக்ஸ் இல்லை

மட்டக்களப்பு மே 31

மட்டக்களப்பு பொது தபாலகத்தில்டெலெக்ஸ் சாதனங்கள் இல்லை. கடந்த கால அசம்பாவிதங்களின் போது பாதுகாப்பைக் காரணம் காட்டி இவை தற்காலிகமாக அகற்றப்பட்டிருந்தன ஆனால் நிலைமை தற்போது சீரடைந்த பின்னரும் இவை மீளவும் தபாலகத்தில் இணைக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்வார்கள் என இச்சேவை இன்மையால் பாதிப்புற்ற மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். (ப-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English

ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம், ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில், ஆங்கிலம் பேசும் பயிற்சி.

விபரங்கட்கு:

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.



# உதயன்

31 - 05 - 1990 வியாழக்கிழமை



Method of Book-keeping

கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும். ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.

விபரங்கட்கு:-

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.


## யாழ். மணியம் தோட்டப் பகுதிக்கு ஒருமாத காலத்தில் மின் கிடைக்கும்

### மின்சாரசபை உயரதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் மணியம் தோட்டப் பகுதிக்கு இன்னும் ஒருமாத காலத்திற்குள் மின்சார விநியோகம் கிடைக்கும்.

இதற்கான வேலைகளை இலங்கை மின்சாரசபை துரிதமாக மேற்கொண்டு வருவதாக சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த மின்விநியோகவேலைகளைப் பூர்த்திசெய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 21 லட்சம்ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மணியம்தோட்டத்திற்கு மின்வழங்குவதற்கான இணைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் இலங்கை மின்சாரசபையே அப்பகுதியில் பாவனையாளர்களுக்கு மின் விநியோக வேலைகளைக் கண்காணித்து வழங்கும்.

இந்த மின்விநியோக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதால் யாழ். மாநகரசபைக்கு அப்பால் தற்போது மின்சார விநியோகமற்றிருக்கும் நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு ஆகிய பகுதிகளும் மின்சார விநியோகத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு உருவாகியிருக்கின்றது. (ஒ-2-3)

## பாடசாலைகளில் மீண்டும் மாதாந்தப் பரீட்சை

கொழும்பு, மே 31

பாடசாலைகளில் மீண்டும் மாதாந்தம் பரீட்சைகள் நடத்தப்படவேண்டும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. அத்துலத்முதலி உத்தரவிட்டிருக்கிறார்.

இதனைவிட தவணைப் பரீட்சைகளும் நடத்தப்பட வேண்டும்.

மாணவர்களின் கல்வித் தரத்தை மதிப்பீடு செய்ய மாதாந்த தவணைப் பரீட்சைகள் உதவும் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார். (அ-எ)

## பிரிட்டிஷ் உபகரணங்கள் அடுத்த மாதம் வருகின்றன

யாழ் பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கும் உபகரணங்கள் அடுத்த மாதம் கொழும்புக்கு வந்து சேர்ந்து ரயில்மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும்.

கப்பல்மூலமாக கொழும்புக்கு வந்துசேரும் இந்த உபகரணங்கள் சுங்கப் பரிசோதனை இன்றி ரயில் மூலம் கொண்டுவரப்பட்டு யாழ். ரயில் நிலையத்தில் சுங்கப் பரிசோதனை செய்யப்படும்.

இதற்கான அனுமதியை பல்கலைக்கழகம் உயர்மட்ட அதிகாரிகளிடம் பெற்றுள்ளது.

இந்த உபகரணங்கள் கையளிக்கும் வைபவத்தில் பிரிட்டிஷ் தூதர் கலந்து கொள்வார். (இ-3)


எமது இன்றைய புதிய வெளியீடு

ரகுமான் ★ ராதிகா ★ S.S சந்திரனின்

**பட்டணந்தான் போகலாமடி**

[ஒறிஜினல்]

**வீடியோ விமல்**

117, மானிப்பாய் வீதி,

ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். [13177]


### அறிவித்தல்

**ஈ. வி. தளையசிங்கம் அன் கோ பட்டயக் கணக்காளர்கள்**

ஏ. எஸ். சங்கரப்பிள்ளை கட்டிடம் முதல் மாடி, 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி ஸ்தாபனத்தின் உரிமையாளர் காலஞ்சென்றதைத் தொடர்ந்து இந்த ஸ்தாபனத்தைச் சார்ந்த வாடிக்கையாளர்களின் சகல கோவைகளும் மற்றும் பொறுப்பில் இருந்த ஆவணங்களும் அதே முகவரியில் இரண்டாம் மாடியிலுள்ள **இராசநாதன் இரவீந்திரவர்மன் அன் கோ** (R. R. Vavman & Co) **பட்டயக்கணக்காளர்** வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், அனைத்து வாடிக்கையாளர்களையும் அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி வி. தளையசிங்கம்

[13311]

## OBITUARY

### Mrs. S. Rajadurai

The death is announced of Mrs. Sundari Rajadurai (Retired Teacher, M. G. H. S. Pt.Pedro). Loving wife of the late Rev. Rajadurai, beloved Mother of Thangarajan, late Rudrarajan, Dharshini and mother-in-law of Annette, Jeya, Jeyaseelan (Canada), loving sister of late Cyrus Lews, late Albert Lews, late David Lews, late Ramabai, Paul Lews, Sam Lews, Aron Lews.

Funeral on Thursday 31st June.

SAM LEWS
Manipay

40, Moor Road,
Wellawatta.

(13176)

### புதிய இந்திய தூதுவர் யார்?

கொழும்பு, மே 31

இத்தாலியில் இந்தியத் தூதராகத் தற்போது பணியாற்றி வரும் ஜனாப் மிஸர் அக்பர் கல்கலிலி இலங்கைக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்படலாம்.

கொழும்பில் அதிகாரபூர்வ வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. (ஒ-எ)

### ஆஸ்பத்திரியில் சைக்கிள் திருட்டு

யாழ் வைத்தியசாலை வளவுக்குள் பூட்டி விடப்பட்டிருந்தமருத்துவ பீட மாணவி ஒருவரின் சைக்கிள் நேற்றுத் திருட்டுப் போயுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவி யாழ் பொலீஸில் முறையிட்டுள்ளார். (ஒ 10)

### லண்டன் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 31

"சர்வதேச கணக்குப் பதிவாளர்கள் நிறுவனம்" "இன்ஸ்ரிரியூட் ஒப் டேட்டா புறோசசிங் மனேஞ்மென்ட்" ஆகிய லண்டன் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளன.

எதிர்வரும் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் இல.16 மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள "ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் அட்மினிஸ்ரேசன்" நிறுவனத்தில் இப் பரீட்சைகள் நடைபெறும். (இ)

### முறைப்பாட்டு பிரதிகள் தேக்கம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ் பொலீஸ் நிலையத்தில் ஆயிரத்துக்கும்மேற்பட்ட முறைப்பாட்டுப் பிரதிகள் தேங்கிக் கிடக்கின்றன.

இதுவரை முறைப்பாட்டின் பிரதிகளை பெறாதவர்கள் பொலீஸ் பகுதியுடன் தொடர்பு கொண்டு தமது பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

### கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம்,மே 31

காங்கேசன்துறை பொலீஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 4 இந்தியர்களும்நேற்று பொலீஸ் பாதுகாப்புடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் கடந்த 25 ஆம் திகதி கடத்தல் நடவடிக்கை ஒன்றின்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### அனுரா கண்டனம்

கொழும்பு, மே 31

இலங்கை போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் அரசின் முடிவை பதில் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கண்டித்திருக்கிறார்.

இந்த விஷயம் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கதிகதி ஒன்றை நிர்ணயிக்கும்படிசபாநாயகரை திரு.பண்டாரநாயக்கா கேட்டிருக்கிறார்.

### பாடசாலை அதிபரிடமே பொறுப்பு

கொழும்பு, மே 31

வகுப்பேற்றப் பரீட்சையில் சித்தியடையாத மாணவரை வகுப்பேற்றுவதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப் பொறுப்பை பாடசாலை அதிபர்களிடமே விட்டுவிடுவது என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி தீர்மானித்திருக்கிறார். (ஒ-எ)

### சுற்றுலா

யாழ்ப்பாணம், மே 31

புத்தூர் நலற்கிரி அ. மி. த. க. பாடசாலை மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு உதயன் அலுவலகத்துக்கும் வந்திருந்தனர். [இ]



யாழ். மருத்துவ சங்கத்தின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் கடந்த சனிக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற சமயம் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவத் துறைப் பேராசிரியர் றிஸ்வி ஷெரிவ் ஆய்வுரை நிகழ்த்துகிறார். வைத்தியர்கள், வைத்தியத்துறை மாணவர்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ)

## கொக்கிளாய்ப் பகுதியில் பல்லின ஆய்வு நிலையம்

கிளிநொச்சி விவசாய பீட மாணவர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள கொக்கிளாய் பகுதியில் பல்லின ஆய்வு நிலையம் அமைக்கப் படவிருக்கிறது.

நூறு ஏக்கர் அரசகாணிகளில் இந்த ஆய்வு நிலையத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தக் காணியை வழங்க கிளிநொச்சி அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் உறுதி அளித்துள்ளார்.

இந்த ஆய்வு நிலையத்தில், பல்வேறு இன மிருகங்கள் பற்றிய ஆய்வும், உப-உணவு பயிற் செய்கை ஆய்வும், மீன் பிடித்தொழில் ஆய்வும், காடுவளர்ப்பு பற்றிய ஆய்வும் மேற் கொள்ளப்படும். (இ - 3)

## மாகாணசபை உறுப்பினர்கள் நாளையுடன் பதவி இழப்பு

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் 73 உறுப்பினர்களின் பதவிகளும் நாளை முதல் காலாவதியாகின்றன.

இது குறித்து தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீசில்வா மாகாண சபையில் அங்கம் வகிக்கும் சகல அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவிக்க இருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணசபைச் சட்டத்தின்படி, பதவி இழக்கும் இந்த உறுப்பினர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கும்படி அக்கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் கோருவார் என்று அச்செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

## ஆயுள் காப்புறுதி செய்வதில் யாழ்ப்பாணத்தில் ஆர்வம்

### ஐந்து மாதங்களில் ரூபா 4 கோடி

யாழ்ப்பாணம் மே 31

யாழ். மாவட்டத்தில் கடந்த ஐந்து மாதங்களில் 4 கோடி ரூபா பெறுமதியில் ஆயுள் காப்புறுதிகள் பெறப்பட்டுள்ளன என்று காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திரு அப்புத்துரை தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் 9 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான ஆயுட்காப்புறுதி பெறவேண்டும் என்று காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைமையகம் பிராந்திய அலுவலகத்தைப் பணித்திருந்தது.

ஆனால் மக்கள் காட்டிய ஆர்வத்தால் இது வரை 4 கோடி ரூபாவுக்கு மக்கள் ஆயுள் காப்புறுதி பெற்றிருக்கிறார்கள்.

வருட முடிவுக்குள் குறிப்பிட்ட எல்லையை விட கூடுதல் அளவு ஆயுள் காப்புறுதி கிடைக்கும் என முகாமையாளர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-3)

### விசேட கட்டணமாக

## ஐந்நூறு ரூபா செலுத்தினால் ஒரே நாளில் பாஸ்போர்ட்!

கொழும்பு மே 31

ஒரே தினத்தில் பாஸ்போர்ட் பெற விரும்பியவர்கள் அதனைப்பெற விசேட கட்டணமாக ஐந்நூறு ரூபா செலுத்த வேண்டும்.

இதற்கான திட்டம் ஒன்று நாளை (ஜூன் 1) முதல் நடைமுறைக்கு வரவிருப்பதாக குடியகல்வு குடிவரவுத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

சகல நாடுகளுக்குமான பாஸ்போர்ட்டைப் பெற இப்போது செலுத்தும் ஆயிரத்து 300ரூபா கட்டணத்துடன் மேலதிகமாக ஐந்நூறு ரூபா எட்டுமணிக்குச் செலுத்தினால் அன்று மாலை 3.30 மணிக்கே பெற்றுக்கொள்ள முடியும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான விண்ணப்பத்துடன் செலுத்தப்படும் 300 ரூபா கட்டணத்துடன் மேலதிகமாக 500ரூபா செலுத்தினால் அன்று மாலையில் அதற்கான பாஸ்போர்ட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சாதாரணமாக விண்ணப்பங்களுக்கான பாஸ்போர்ட்டுக்கள் நான்கு தினங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடைமுறைகள் சரியான ஆவணங்களுடன் சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருத்தமுடையதாகும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது. [உ-எ]

### கிழக்கு ஐரோப்பாவில் நேற்று பூமியதிர்ச்சி

லண்டன்,மே 31

கிழக்கு ஐரோப்பாவில் பல நாடுகளை நேற்றுபூமியதிர்ச்சி தாக்கியதாக அறிவிக்கப்படுகிறது.

ருமேனியா, யூகோஸ்லேவியா, போலந்து ஆகிய நாடுகளும் சோவியத் யூனியனின் தலைநகர் மாஸ்கோவிலும் பூமியதிர்ச்சி பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ருமேனியா தலைநகர் புக்காறெஸ்டில் இருவர் காயமடைந்தனர். கட்டடங்கள் சில சேதமடைந்தன. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து அருணாசலம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து அருணாசலம் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகலோகேந்திரன் (கொறியன் லங்கா சாமென்ஸ், கட்டுநாயக்கா), ரவீந்திரன் (ஜனனி வீடியோ கொழும்பு, மானிப்பாய்), ராஜசுரேந்திரன் (சவூதி), புகலேந்திரன் (ரெமிக்கோ சாமென்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெகதாவின் அன்பு மாமனும் அமேஷாவின் அப்பப்பாவும் சண்முகநாதன் (F பொறஸ்ற் ஒபீசர்) அவர்களின் ஒரே தம்பியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 31-5-90 மாலை 4 மணியளவில் 41, முத்துவெல்லமாவத்தை, கொழும்பு-15 இல்லத்தில் நடைபெறும்.

(3677)

### திருமதி நல்லபிள்ளை கந்தையா

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி நல்லபிள்ளை கந்தையா நேற்று 30-5-90 அன்று காலமானார்.

இவர் அம்பலவாணர் கந்தையாவின் அன்பு மனைவியும் பரமானந்தம், நாகேந்திரம், சிவஞானம், திருமதி நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம், திருமதி கனகேஸ்வரி சந்திரதாசன், திருமதி புவனேஸ்வரி சிவஞானசுந்தரம், செல்வி இரத்தினேஸ்வரி கந்தையா ஆகியோரின் அன்புத் தாயாரும் க. பாலசுப்பிரமணியம், ச. சந்திரநாசன், ந. சிவஞானசுந்தரம், திருமதி சத்தியவதி பரமானந்தம், திருமதி குணநாயகி நாகேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலம் சென்ற வே. கனகசபை, திருமதி அ. ஆச்சித்தாய் ஆகியோரின் சகோதரியும் அச்சுதன், மாதங்கி, கீர்த்தனன், பாமினி, மாலினி, குமணன், றோகினி, சறோஜினி, நகுலேஸ்வரன், ரூபன், குமுதினி, ரஜீபன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சங்கரத்தை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு. அ. கந்தையா.

சங்கரத்தை.

(C/4653)

### திருமதி லீலா புஷ்பமணி சைமன் இராசையா

திருமதி லீலா புஷ்பமணி சைமன் இராசையா காலமாகி விட்டார். இவர் கோப்பாயைச் சேர்ந்தவரும் சுண்டிக்குளி மகளிர் பாடசாலையில் கடமை ஆற்றியவரும், காலம் சென்ற திரு. செல்வம் சைமன் இராசையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி லிடியா சேதுகாவலர் அவர்களின் அன்புச் சகோதரியும், ஹர்வுசிலன் சேதுகாவலரின் பெரியதாயாரும், இரஜாந்தினி சேதுகாவலரின் மாமியாரும், ஸ்டீபன், ஹரேந்திராவின் பேர்த்தியாரும், டேவிட்டின் வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 31- 05- 90 மாலை 3. 00 மணிக்கு ஆரம்பமாகி நல்லடக்கத்திற்காக கோப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:

Dr. இராஜேந்திரா

82, பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

(13310)

### திரு. கந்தையா இராமலிங்கம்

புங்குடுதீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி மார்க்கட் தேனீர்க்கடை முன்னாள் உரிமையாளருமான திரு. கந்தையா இராமலிங்கம் 30 - 05 - 90 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராசம் அவர்களின் அருமைக் கணவரும், குணரத்தினம், தெய்வேந்திரன், பூமணி (ஆசிரியை), மகேந்திரன், டிசம்பரநாதன், சாந்தசிவரூபி, தவராசா, வசந்தா, தேவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயலட்சுமி, பரராஜசிங்கம், தவமணி, நகுலேஸ்வரி, சற்குணநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 31-5-90 வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு புங்குடுதீவு கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக மணற்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் வேண்டிக் கொள்ளுகிறோம்.

தகவல்;

வை. கா. தளையசிங்கம்.
(மருமகன், கிராமசேவை அலுவலர்)

இல 84, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(13174)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31-05-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org